# தமிழரசு

நவம்பர் 1 - 15, 1999 ரூ. 5/





தமிழ்நாட்டின் முதல்
உழவர் சந்தை
காய்கறிகள், பழங்கள் நேரடி விற்பனை வளாகம்
மதுரை விற்பனைக்குழு. அண்ணா நகர், மதுரை-20.
14-11-99.
உழவர் சந்தை

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
ஐப்பசி
நவம்பர் 1–15, 1999
மலர் : 31 இதழ் : 9
விலை ரூ.5


## இந்த இதழில்...


- ★ உழவர் சந்தை ------------------ 2
- ★ அரசு மக்கள் நலவாழ்வுத் திட்டம் ------ 7
- ★ இராயபுரம் மேம்பாலம் ------------- 10
- ★ பொன்னியின் செல்வன் ஆங்கில பதிப்பு வெளியீட்டு விழா --------------- 15
- ★ மதுரை மேம்பாலம் -------------- 20
- ★ கலைஞர் ஆட்சியில் ஊரக வளர்ச்சி ----- 21
- ★ வான்புகழ் வள்ளுவம் --------------28
- ★ தமிழ்ப் பழமொழிகளில் அறிவியல் ------ 29
- ★ லியோ டால்ஸ்டாயின் இரு கதைகள் --- 34
- ★ எங்கள் ஊர் பிரச்சினை ------------ 40
- ★ கலைஞரின் உழவர் சந்தை ----------41


முதல் பக்க அட்டையில்

**மதுரை உழவர் சந்தை**

இரண்டாவது மூன்றாவது அட்டைகளில்

**உழவர் சந்தைக் காட்சிகள்**

### திருக்குறள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

உண்மையைக் கண்டறிந்து தெளிவடையாதவர்கள், தமது ஐம்புலன்களையும் அடக்கி வெற்றி கண்டிருந்தாலும் கூட அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

மதுரை மாநகரில் தமிழக அரசின் திட்டங்கள் மிக முக்கியமான திட்டங்கள் தொடங்கப்படுவது வாடிக்கை. நேற்றும் இன்றும் நான் கலந்துகொண்ட விழாக்களில் பேசியவர்கள் மதுரை நகரத்தில் எந்தெந்த நிகழ்ச்சிகள் முதன்முதலாக தொடங்கப்பட்டன, எந்த திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பதையெல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

தந்தை பெரியார் நினைவைப் போற்றுகின்ற சமத்துவபுரம் திட்டம் மதுரையிலேதான், இந்த மாவட்டத்தில்தான் மதுரைக்கு அருகில் மேலக்கோட்டையில் தொடங்கப்பட்டது.

திட்டமான பரவலாக வளரவேண்டிய விரிவாக ஆக வேண்டிய திட்டமான இந்த உழவர் சந்தைத் திட்டமும் மதுரையம்பதியிலே இன்றைய தினம் தொடங்கப் பட்டிருக்கின்றது.

**மதுரைக்குப் பெருமை**
**சேர்க்கும் மற்றொரு திட்டம்**

மதுரைக்கு பல பெருமைகள் உண்டு. அதைப்போல தமிழக அரசு தொடங்குகின்ற திட்டங்கள் எல்லாம் இங்கேதான் தொடங்கப்படுகின்றன என்கின்ற பெருமையும்

# உழவர் சந்தை

இன்றைக்கு மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்கள் உருவாகி யிருக்கின்றன. அதைப்போல இன்றைக்கு மிகப் புதிய மதுரைக்கு சேருகிறது என்பதைவிட மதுரையின் மூலம் தமிழக அரசுக்கு அந்தப் பெருமை சேருகிறது என்பதை நான் இங்கு எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.



'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை' என்று மதுரையின் சிறப்பை இலக்கியம் எடுத்துக் கூறும். அத்தகைய உழவர் பெருந்தகைகளின் உழைப்பை பெருமையை எடுத்துக் காட்டுகின்ற இந்த மண்டலத்தில் இந்த அரசின் சார்பில் இன்றைக்கு தொடங்கப்பட்டுள்ள உழவர் சந்தைக்கு கருத்துக்குறிப்பு இன்று நேற்றல்ல, ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பு; 17.3.99 அன்று 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையிலே வைத்து நான் உரையாற்றிய போதே குறிப்பிட்டிருக்கின்றேன்.

கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடை செய்தவுடன் உரிய விலையைப் பெறுவதற்கும் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துள்ள சர்க்கரை ஆலைகள் வழிவகை செய்வது போன்ற சட்டபூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், திட்டமொன்று வரும் நிதியாண்டிலிருந்து தொடங்கப்படும் என்று அறிவித்திருந்தேன்.

**நூறு உழவர் சந்தைகள் மாநிலம் முழுதும் அமைக்கப்படும்**

அந்த அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில்தான் 'காய்கறிகள், பழங்கள் முதலான வேளாண் விளைபொருட்களை இடைத்தரகர்கள், வணிகர்கள் குறுக்கீடு ஏதுமில்லாமல் உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்யும் வழிவகை செய்கின்ற அளவிற்கு மாநிலத்தில் நகர்ப்புறங்களில் 100 இடங்களில் 'உழவர் சந்தைகள் நிறுவப்படும்' என்று 25.10.99 அன்று அறிவிக்கப்பட்டு இன்றைய தினம் மதுரை நகரில் இந்த அருமையான திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது.

இதனை இவ்வளவு விரைவில் இங்கே தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தங்கவேலு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரிய முயற்சிகள் ஆகும். எனவே நான் உழவர் பெருமக்களின் சார்பாக அவருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.




இவ்வளவு விரைவில் இந்த இடத்தை அமைத்து இந்த இடத்தை முதலில் தேர்வு செய்து இந்த இடத்தில் உழவர்கள் தங்களுடைய பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்வதற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும். இதிலும் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நானும், வேளாண் துறை அமைச்சரும், பேரவைத் தலைவர் பி.டி.ஆர். அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இங்கே வந்தவுடனேயே சொல்லியிருக்கிறோம். மேடையில் கூட அதைப்பற்றி சொல்லியிருக்கிறோம்.

இதனுடைய உயரம் கிட்டத்தட்ட பத்து அல்லது பத்தரையடி உயரத்திலே இவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வளவு உயரம் தேவையில்லை. உங்களுடைய வியாபாரம் உயர வேண்டும். அந்த உயரம்தான் தேவையே தவிர இந்த உயரம் தேவையில்லை. எட்டடி உயரத்திற்கு இந்த அஸ்பெஸ்டாஸ் கொட்டகைகள் அமைந்தால் போதுமானது என்கின்ற கருத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதுபோலவே மழை நேரங்களில் வியாபாரிகளுக்கு தொல்லை ஏற்படாமல் காய்கறிகள் அல்லது பொருட்கள் இவைகளுக்கு சேதம் எதுவும் ஏற்படாமல் இருக்க தார்ப்பாய் என்கின்ற அந்த மறைவுத் திரையை கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கை வெகு விரைவில் எடுக்கப்படும் என்பதையும் நான் உழவர் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகரில் ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். நாள்தோறும் ஒருவருக்கு 350 கிராம் வீதம் 350 மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவை மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், அதைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் கூட இங்கு வருகின்றன.

**விவசாயிகளிடம் பணம் பெற பயன்படுத்திய வழிகள்**

இவற்றை மொத்த வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்குவதோடு கமிஷன், மகமை என்ற பெயர்களிலும்; விவசாயிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்கின்றனர்.

விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட காய்கறிகளை கூடுதலாக இலாபம் வைத்து சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றார்கள்.

சில்லறை வியாபாரிகளோ மேலும் இலாபம் வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றார்கள். இதனால் என்ன விளைவு என்றால் விவசாயிகளுக்கு மிகக்குறைந்த விலைதான் கிடைக்கிறது. உற்பத்தி செய்தவர்களுக்கு குறைந்த விலை கிடைக்கின்றது. பொதுமக்களோ அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதற்கு மாற்று ஏற்பாடாகத்தான் இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள திட்டம் உழவர் சந்தைத் திட்டம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த உழவர் சந்தை மதுரையில் அதுவும் மேலும் ஒரு சிறப்பு அண்ணா நகரில் 1.5 ஏக்கர் பரப்பளவில் இந்த சந்தை அமைந்துள்ளது. மொத்தம் இங்கே 80 கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் அமைய இருக்கின்ற இந்த சந்தைகள் இவற்றை பின்பற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.

எண்பது கடைகள் வைக்கின்ற அளவிற்கு இல்லாவிட்டாலும் கடைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இடத்தின் அளவு குறைவாக இருந்தாலும் முறைகளோ வேறு பல தன்மைகளும் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை விவரமாக நான் குறிப்பிடுகின்றேன்.




இந்த சந்தையில் மின்விளக்கு, குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இங்கு முதற்கட்டமாக மதுரையைச் சுற்றிலும் விளையும் கத்தரிக்காய், வெண்டை, அவரை, பீர்க்கங்காய், சுரைக்காய், புடலை, பாகற்காய், முருங்கைக்காய், தக்காளி, வாழைக்காய், வாழை இலை, மல்லி, கருவேப்பிலை, இஞ்சி, தேங்காய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் மற்றும் கீரை வகைகள் முதல் இங்கே விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகைக் காய்கறிகள், மதுரையை சுற்றி உள்ள செக்கானூரணி, உசிலம்பட்டி, சின்ன உடைப்பு, வலையங்குளம், மேலூர் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில்தான் அதிகம் உற்பத்தியாகின்றது. இப்பகுதிகளில் இவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும் விவசாயிகள் இந்த உழவர் சந்தைக்கு நேரடியாகத் தங்கள் காய்கறிகளை யெல்லாம் கொண்டு வரலாம்.

இந்த விவசாயிகளுக்கு முக்கியமாக புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டைகள் அரசு வழங்கி இருக்கிறது. அவர்கள் அந்த அடையாள அட்டையைக் காட்டி அரசு பஸ்ஸில் காய்கறி மூட்டைகளை ஏற்றி உழவர் சந்தைக்குக் கொண்டுவரலாம். அப்படி கொண்டுவரும் காய்கறி மூட்டைகளுக்கு பஸ்ஸில் சுமை கட்டணம் (லக்கேஜ்) வசூலிக்கப்பட மாட்டாது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றை இலவசமாகவே கொண்டு வரலாம். பேருந்துகளிலோ, வண்டியிலோ உழவர் சந்தைக்கு கொண்டுவரப்படும் காய்கறி மூட்டைகளை நாங்கள்தான் இறக்குவோம் என்று கட்டாயப்படுத்த சுமைப் பணியாளர்கள் யாரும் அனுமதிக்கப் படமாட்டார்கள். விவசாயிகளே அவற்றை இறக்கிக் கொள்ளலாம்.

**விலையை நிர்ணயிக்க விவசாயிகள் அடங்கிய குழு**

சந்தையில் விவசாயிகள் நேரடியாக தங்கள் காய்கறிகளை விற்பனை செய்யலாம். காய்கறிகளின் விலை அன்றாடம் நிர்ணயம் செய்யக்கூடியது என்பதால், விலையை நிர்ணயிக்க விவசாயிகள் அடங்கிய

குழு ஒன்று இந்த உழவர் சந்தையிலேயே இருக்கும். அந்தக் குழு நிர்ணயித்த விலைக்கு அனைவரும் காய்கறிகளை விற்பனை செய்யமுடியும். காய்கறிகளுக்குரிய விலை விவரத்தைக் கடைமுன்னால் தொங்கவிட வேண்டும். இந்த உழவர் சந்தையை பராமரிக்க மதுரை வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழு அலுவலகம் இங்கேயே அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த அலுவலகம் காய்கறிகளை எடைபோடுவதற்கு தேவையான தராசு, படிக்கல் ஆகியவைகளை வழங்கும். வேறு தராசு, வேறு படிக்கல் பயன்படுத்தக்கூடாது. அலுவலகம் வழங்கும் தராசு படிக்கல்லை பயன்படுத்தித்தான் விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உழவர் சந்தையில் விவசாயிகளிடம் பொதுமக்கள் புத்தம் புது காய்கறிகளை வாங்க இந்த சந்தை பயன்படும். அரசாங்கமே எடை படிக்கல் கொடுப்பதால் எடை சரியாக இருக்கும். யாருக்கும் சந்தேகம் எழத் தேவையில்லை. இங்கு இந்தச் சந்தையில் விவசாயிகளுக்கு வாடகையும் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் தாங்களே விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்வதாலும், பஸ்சில் லக்கேஜ் இல்லாமல் இலவசமாக கொண்டு வருவதாலும் அவர்களுக்கு லாபகரமான விலை கிடைக்கும் என்பதையும் நாம் உணர முடிகிறது.

எனவே விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் மிகப்பெரிய அளவில் இத்திட்டம் பயன்தரும். வேளாண்மைத் துறை அமைச்சர் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டதைப்போல உழவருக்கும் நுகர்வோருக்கும் ஒரு நல்ல ஒற்றுமையான நிலையையும் அதே நேரத்தில் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரக்கூடிய இந்த அருமையான திட்டத்தை இன்றைக்கு நான் ஆரம்பித்து வைத்திருக்கின்றேன். இந்தத் திட்டம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் இத்திட்டம் வரையறுக்கப்பட்டு, இப்போது நிறைவேறத் தொடங்கியிருக்கிறது. தொடர்ந்து பல நகரங்களில் பல பகுதிகளில் இந்த சந்தைகள் தொடங்கிட உரிய முயற்சிகளை அரசும், அரசு சார்புடைய வேளாண்மைத் துறையும் எடுக்கும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தெரிவித்து உங்கள் வியாபாரம் செழிக்கவும் அதன் மூலமாக உழவர் பெருமக்களும் பொது மக்களும் பயன் அடையவும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

*– மதுரையில் உழவர் சந்தை திட்டத்தை 14–11–1999 அன்று தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*




## உழவர் சந்தை திட்டத்தின் சிறப்புகள்

★ அழுகும் பொருட்களான பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை விவசாயிகள் இடைத்தரகர்கள்/வியாபாரிகள் குறுக்கீடு ஏதுமில்லாமல், நேரடியாக நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பது.

★ நுகர்வோர், விவசாயிகளிடமிருந்து காய்கறிகள் பழங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் நேரடியாக வாங்குவது.

★ இடைத்தரகர்கள்/வியாபாரிகள் குறுக்கீட்டிற்கு இடமில்லாது பழங்கள், காய்கறிகளின் விலையைச் சீராக வைத்திருப்பது.

★ மானிய விலையில் விதைகள், இடுபொருட்கள் ஆகியவற்றைக் குறித்து வேளாண்மை/தோட்டக்கலைத் துறை விரிவாக்கப் பணிகளை ஒருமுகப்படுத்துவது.

★ காய்கறிகள், பழங்கள் விற்பனை குறித்த தகவல் தொடர்பு மையங்களாக செயல்படுவது.

★ அழுகும் பொருட்கள் வீணாவதைக் குறைக்கும் பொருட்டு கையாளும் முறை, சிப்பங்கட்டும் முறை ஆகியவை குறித்த புதிய தொழில்நுட்ப முறைகள் பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை மற்றும் பயிற்சி அளிப்பது.

★ இந்த சந்தைகள் 40 கி.மீ. சுற்று வட்டாரத்தில் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் காய்கறிகள்/பழங்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள 10–15 கிராமங்களுக்கு, ஒன்று என்ற அளவில் அருகிலுள்ள நகர்ப்புறத்தில் காய்கறிகள்/பழங்கள் குறிப்பிடத்தக்க அளவில் தேவையுள்ள மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில், 50 செண்ட்டுக்குக் குறையாத நிலப்பரப்பில் நுகர்வோருக்கு வசதியான இடங்களில் அமைக்கப்படும்.

★ இச்சந்தைகளில் ஒரு கடை 5 அடி அகலம், 8 அடி நீளம் என்ற அளவில், சுமார் 50 அல்லது 60 கடைகள் அமைக்கப்படும். தேவைப்படின் கூடுதலாக கடைகள் கட்டப்படும்.

★ விவசாயிகள் பயன்பாட்டிற்காக தராசுகள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகள், தொலைபேசி/தொலையச்சு (FAX), வாகன நிறுத்துமிடங்கள், மிஞ்சிய பொருட்களைச்சேமித்து வைக்க சேமிப்பு அறைகள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இச்சந்தைகள் இருக்கும்.

★ தமிழகம் முழுவதும் 100 உழவர் சந்தைகள் ரூ.7 கோடி மதிப்பீட்டில் உருவாக்கம்.

## திட்டச் செயலாக்கம்

★ இச்சந்தைகள் வேளாண் விற்பனைக் குழுவைச் சார்ந்த அலுவலர்களால் பராமரிக்கப்படும்.

★ விவசாயிகள் சந்தைகளுக்குக் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக, தேவைக்கேற்ப பொருள் தாங்கிகள் (Luggage Carrier) பொருத்திய சிறப்பு பேருந்துகள் இவ்வழித் தடங்களில் இயக்கப்படும். சரக்குகளுக்குக் 'கட்டணமின்றி பயணிகளுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கப்படும்.

★ விற்பனை செய்வதற்குக் கொண்டு வரப்பட்டுள்ள காய்கறிகளின் அளவின் அடிப்படையிலும், முதலில் வருவோருக்கு முதலில் என்ற அடிப்படையிலும் விற்பனைக் குழு அதிகாரிகளால் விவசாயிகளுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்து தரப்படும். எந்த ஒரு விவசாயியும் எந்த ஒரு இடத்திலும் சொந்தம் கொண்டாட இயலாது.

★ தோட்டக்கலைத்துறையைச் சார்ந்த விரிவாக்கப் பணி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

★ இந்த அட்டைகளைக் கொண்டுவரும் விவசாயிகள்/அவரது குடும்பத்தினருக்கு மட்டுமே கடைகள் ஒதுக்கீடு செய்து தரப்படும்.

★ இச்சந்தைகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.


★ நிர்வாக இடர்பாடுகளைக் களைவதற்காக ஒவ்வொரு சந்தையிலும் 'விவசாயிகள் குழு' அமைக்கப்படும்.

★ சந்தை நிலவரத்தைப் பொறுத்து விளை பொருட்களுக்கு விவசாயிகளே விலையை நிர்ணயம் செய்வார்கள்.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் 'உழவர் சந்தை' வெற்றிகரமாக நடைபெற மாவட்ட ஆட்சியர் பொறுப்பாவார்.

★ மாநில அளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது வேளாண்மை விற்பனை ஆணையரின் பொறுப்பாகும். அவர் மாதமிருமுறை பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைப்பார்.

★ சந்தைகள் அமைப்பதற்காக, நிலங்கள் அரசு நிலமாக இருந்தால் இலவசமாகவும், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமானவை என்றால் மிகக் குறைந்த குத்தகைத் தொகைக்கும் (Nominal Lease Amount) சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும்.



# ஏழை எளியோருக்கு பன்முனை இலவச சிகிச்சை




– முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற பல திட்டங்களைத் தொடர்ந்து மற்றொரு புதிய திட்டம்தான் அரசு நலவாழ்வுத் திட்டம்.

இத்திட்டம் ஏழை, எளியோர்க்கான பன்முனை இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டம் (Free comprehensive Health Care Scheme for the Poor).

தமிழ்நாட்டில் மொத்தம் 12 ஆயிரத்து 617 ஊராட்சி மன்றங்களும், 613 பேரூராட்சிகளும், 102 நகராட்சிகளும், 6 மாநகராட்சிகளும் உள்ளன. கிராமப்புறங்களில் சுமார் 1400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 364 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள் உள்ளன.

**இலவச இரத்தப் பரிசோதனை**

ஏழை எளியோர் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து அதனால் ஏற்படும் வேதனையைத் தணித்துக் கொள்வதற்கு மட்டுமே மருத்துவர்களையும், அரசு சுகாதார நிலையங்களையும் நாடிச் செல்கின்றனர்.

பொதுவாக மக்களிடையே நிலவிவரும் இந்த மனோநிலையை மாற்றி, நோய்கள் வருமுன் தடுக்கும் அணுகுமுறையை மக்களிடையே பரப்பி, நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், நோய்த்தடுப்பு முறைகளை எளிய வகையில் விளங்க வைத்துப் பின்பற்றச் செய்திடவும், ஏழை எளியோர்க்கான இலவச பன்முனை மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்து பரவலாகவும் தீவிரமாகவும் செயல்படுத்திட முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்து அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு கண், பல், காது, மூக்கு, தொண்டை, வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், நீரிழிவு, காசநோய் போன்றவைகளுக்கான மருத்துவப் பரிசோதனைகளுடன் இருதய நோய், மகப்பேறு மருத்துவம், குழந்தைகள் நோய், முதியோர்க்குத் தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நோயைக் கண்டறிந்து அதற்கான முதல் சிகிச்சைகளும் செய்யப்படும். முகாம்களுக்கு வரும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக இரத்தப் பரிசோதனை செய்யப்படும்.

**ஒவ்வொரு மாவட்டத்திலும்**
**50 இடங்களில் மருத்துவ முகாம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாதமும், ஐம்பது இடங்களில் இந்த பன்முறை மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள மக்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் இத்தொடர் திட்டத்தின்கீழ் மருத்துவப் பரிசோதனைகளும் சிகிச்சையும் அளிக்கப்படும்.

**மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு**

அனைத்து மாவட்டங்களிலும் இந்த முகாம்களை செம்மையாக நடத்தி அவற்றின் பயன்கள் முழு

அளவில் பொதுமக்கள் எல்லோரையும் சென்றடைவதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும்.

இந்தக் குழு, ஒவ்வொரு மாதமும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்த வேண்டிய ஐம்பது இடங்களைத் தேர்வு செய்து, எந்தெந்த நாட்களில் எந்தெந்த மருத்துவ குழு, எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு விரிவான முறையில் அறிவிக்கும்.

ஒவ்வொரு மருத்துவ முகாமிலும்,
1. மருத்துவர் நிபுணர் குழு,
2. பரிசோதனை சாதனங்கள்,
3. மருந்துகள்,
4. பொதுமக்களுக்கு வழங்குவதற்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை அட்டைகள்,
5. மருத்துவர்க்கான வாகனவசதி

ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, ஒவ்வொரு மாதத்திற்கும் செயல்திட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றை வகுக்கும்.


**நலவாழ்வு கண்காட்சி**

ஒவ்வொரு முகாமின்போதும் நல வாழ்வு பற்றிய கண்காட்சியும், கருத்துக் காட்சியும் வீடியோ படமும் கிராமத்து மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் முகாமிலேயே முதல் சிகிச்சையும் இலவசமாக மருந்துகளும் வழங்கப்படும்.

**திட்ட ஒருங்கிணைப்புக்கு தனி அலுவலர்**

தொடர் சிகிச்சை தேவைப்படின், நோயின் தன்மையைப் பொறுத்து எந்த மருத்துவமனைக்கு



எப்பொழுதெல்லாம் செல்ல வேண்டும் எனும் விபரங்களுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

தொடர் சிகிச்சை பெற வேண்டியோர்க்குத் தேவைப்படும் விபரங்கள் அனைத்தும் மாவட்ட அளவில் முகாம்வாரியாக கணிப்பொறியில் புகுத்தப்பட்டு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநில அளவில், மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டத்தை முழு அளவில் ஒருங்கிணைத்து நடத்திட தனி அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார்.



**தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பயன்படுத்தப்படும்**

முகாம்கள் நடத்திடத் தேவையான அளவுக்கு, அந்தந்த மாவட்டத்தில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் (NGOs), இந்திய மருத்துவர்கள் சங்கங்களின் மாவட்ட கிளைகளையும் தொடர் சிகிச்சைக்காக மருத்துவக் கல்லூரிகளையும் தனியார் மருத்துவமனைகளையும் மற்றும் மருத்துவ நிபுணர்களின் சேவையையும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு**

மிகப் பிரமாண்டமான பரிமாணங்களைக் கொண்டுள்ள இந்தத் திட்டம், பரீட்சார்த்தமாக திருவள்ளூர், தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் டிசம்பர் மாதம் முழுவதும் செயல்படுத்தப்படும்.



முகாம்கள் நடக்கும்போதே, முகாம்கள் செயல்படும் விதம், அங்கு வருவோரின் கருத்துப் பிரதிபலிப்பு, முகாம்கள் மூலம் விளையும் நன்மைகள், முகாம்கள் மேலும் பயனுள்ள வகையில் நடத்தப்படுவதற்கான ஆலோசனைகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக நிபுணத்துவம் கொண்ட குழு ஒன்றினால் விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு (Concurrent Evaluation) செய்யப்படும்.

இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் குறைகள் இருப்பின் அவைகளையப்பட்டு, 2000 ஜனவரி மாதம் முதல் முழு அளவில் அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும். ★

# இராயபுரம் மேம்பாலம்

இன்று காலையிலே ஒரு பக்க விளம்பரம் ஒன்றை ஏட்டிலே கண்டிருப்பீர்கள். "விரிவடைகிறது சாலை, வியப்படைகிறது வானம்" என்ற வாசகத்தோடு வண்ண விளம்பரம் ஒன்று ஏடுகளில் வெளிவந்தது. ஒரு பக்க விளம்பரத்தை வண்ணத்திலே வெளியிட அதிகச் செலவு என்ற காரணத்தினால் எல்லா ஏடுகளிலும் வெளியிடாமல் ஒரேயொரு ஏட்டில் மாத்திரம் அந்த விளம்பரம் வந்தது.

**தமிழகத்தின் சாலைகள் எல்லாம் விரிவடைந்து கொண்டிருக்கிறது**

ஏன் அந்த விளம்பரம் என்றால் அது ஒரு அறிவிப்பு. விரிவடைந்து விட்டது சாலைகள் என்று நான் சொல்லமாட்டேன். விரிவடைகிறது என்பதிலிருந்தே தமிழகத்தின் சாலைகள் எல்லாம் விரிவடைந்து கொண்டிருக்கின்றது. அவை இன்னும் விரிவடையப் போகின்றது. இதைப் பார்த்து வானமே வியப்படையப் போகின்றது. வானம் நாமா, அல்லது கீழேயிருக்கின்ற சாலைகளா என்று எண்ணுகின்ற அளவிற்கு சாலைகள் நேர்த்தியாக, நீளமாக அகலமாக, போக்குவரத்துக்கு மேலும் வசதியும் வாய்ப்பும் தரத்தக்கதாக அமைந்திட வேண்டும் என்கிற முனைப்போடுதான் 96ஆம் ஆண்டு நான்காவது முறையாக நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இந்தத் துறைக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்பதற்காக தம்பி கோ.சி. மணி குறிப்பிட்டதைப் போல, பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்து விளக்கியதைப் போல, மேயர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியதைப் போல தமிழகத்திலே பல்வேறு வசதிகள், அடித்தள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்கின்ற அதே நேரத்தில் அந்த அடிப்படை வசதிகளிலே ஒன்று சாலை வசதி என்பதை எண்ணிப் பார்த்து இந்த நெடுஞ்சாலைக்காக தனித்துறை ஒன்றையே அரசின் சார்பில் தோற்றுவித்து அதற்காக தனியாக ஒரு அமைச்சகத்தையும் உருவாக்கி அரசு செயல்பட்டு வருகின்றது.

சென்னையைப் பொறுத்தவரையில் மாநகராட்சி மன்றத்தின் சார்பில் ஒரே நேரத்தில் இப்போது பத்து பாலங்கள் சென்னை நகரில் பல இடங்களில் உருவாகி



வருகிறதென்றாலும், மேலும் பத்து பாலங்களைக் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டு – இந்தப் பாலங்களின் பணி முடிவுற்றதும் அந்தப் பாலங்களின் பணிகள் ஆரம்பமாக இருக்கின்றன என்றாலுங்கூட – மாநிலம் முழுவதும் சாலை வசதிகள் பட்டினப் பகுதிகளிலே இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, பட்டிக்காட்டுப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்குக் கூட, குக்கிராமங்களிலே வாழ்கின்றவர்களுக்குக்கூட, சாலைப் போக்குவரத்து வசதிகள் நல்ல முறையில் அமைந்திட வேண்டும் என்கின்ற தணியாத ஆர்வத்தோடு அந்த ஆர்வம் தந்த வேகத்தோடு இந்த அரசு பணிகளை மேற்கொண்டிருக்கிறது. அந்தப் பணியில் ஒரு அங்கம்தான் இராயபுரத்திலே இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற இந்த மேம்பாலமாகும்.

இங்கே சட்டப்பேரவை உறுப்பினர் மதிவாணன் பேசும்போது இதை யார் கட்டியது என்ற விவாதம் நடைபெறுகிறது. அதற்காக போஸ்டர்கள் எல்லாம் அடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். சமைத்தது யார் என்பதை யார் சுட்டிக் காட்டுவது என்பதிலே ஒரு முறை இருக்கின்றது. சமைப்பவர்கள், பரிமாறுகிறவர்கள், சாப்பிடுபவர்கள், சாப்பிடுகிறவர்களை வேடிக்கை பார்க்கின்றவர்கள் என்ற இந்த பிரிவினரிலே யார் சமைத்தது என்பதை சாப்பிடுகிறவர் சொன்னால்கூட அதிலே அர்த்தம் இருக்கலாம். இவர்கள் சாப்பிட்டவர்கள் நான் அந்தச் சாப்பாட்டைச் சொல்லவில்லை, பரிமாறுகிறவர் சொன்னால் அதிலே அர்த்தம் இருக்கலாம். ஏனென்றால் சமைத்தவர்கள் தான் பரிமாறுகிறவர்களிடம் பொருள்களை எடுத்து பரிமாறுவதற்காகக் கொடுப்பார்கள். அதனால் அவர்கள் சொல்லலாம். ஆனால் ஏற்கெனவே சாப்பிட்டுவிட்டு பிறகு சாப்பிடுகிறவர்களை வேடிக்கை பார்ப்பவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டியது யார் தெரியுமா என்று அறைகூவல் விட்டால் அதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை. மதிவாணன் இந்தப் பிரச்சினையை எழுப்பிய காரணத்தால் விளக்கம் தர வேண்டியவனானேன்.

### வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே எங்கள் கவலை

பொதுவாக இதுபோன்ற விமர்சனங்களுக்கெல்லாம் பதிலளிக்க எனக்கு நினைப்பும் இல்லை, நேரமும் இல்லை. அதைப்பற்றி நான் கவலைப்படுவதுமில்லை. நம்முடைய கவலை எல்லாம் நானாக இருந்தாலும், பேராசிரியராக இருந்தாலும், அந்த அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற அமைச்சர்களாக இருந்தாலும் அத்தனை பேருடைய கவலை மக்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முடிந்த அளவு நிறைவேற்ற வேண்டும். அவர்களுடைய வாழ்வை வளமுள்ளதாக ஆக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற அந்தக் கருத்தில் தான் நாங்கள் நாட்டம் உள்ளவர்களாக இருக்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் பூச்சம்பட்டி என்ற இடத்திலே நடைபெற்ற பெரியார் நினைவு சமத்துவபுர விழாவிலே தம்பி கவிஞர் வைரமுத்து பேசும்போது ஒரு அருமையான கருத்தைச் சொன்னார். இன்று நம்நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு பொதுவாழ்வுக்கும் தனி வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் இருக்கின்றது. பொதுவாக ஊருக்கு ஒரு சாலை போடப்படுகிறதா, ஒரு குளம் வெட்டப்படுகிறதா, ஒரு ஆறு தூர் வாரப்படுகிறதா, பேருந்து விடப்படுகிறதா,



அதற்கான வசதி வாய்ப்புகள் செய்யப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்ப்பதைவிட தன்னுடைய பாக்கெட்டுக்கு என்ன வருகிறது என்பதைப் பற்றித்தான் தனிமனிதன் இன்றைக்குச் சிந்திக்கின்றான், அந்தச் சிந்தனை அவனுடைய வாழ்வைப் பொறுத்தவரையில் தேவை என்றாலுங்கூட, பொதுவாக எல்லா மனிதர்களுக்குமாக சிந்திக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். சிந்திக்க முன்வர வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இந்தப் பகுதியிலே இருக்கின்ற குப்பனுக்கோ சுப்பனுக்கோ இந்த பாலத்தால் என்ன பயன் என்று கேட்டால் திடீரென்று இன்னப்பயன் என்று சொல்லி விட முடியாது. ஏனென்றால் குப்பனும், சுப்பனும் இந்தப் பாலம் இல்லாவிட்டாலும் நடந்தேதான் செல்லக் கூடியவர்கள். அதனால் இவர்களுக்கு பயன் ஏற்பட முடியாது. நான் மறுக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் இந்தப் பாலம் எவைகளுக்குப் பயன்படும் என்பதை குப்பனோ சுப்பனோ எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பகுதியிலே அவன் குடியிருந்து அவனுடைய வீட்டிலே உள்ள யாருக்கோ சுகக் குறைவு ஏற்பட்டு உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றால் தான் அந்த நோயாளியைப் பிழைக்க வைக்க முடியுமென்ற சூழல் ஏற்படும்போது இந்த இராயபுரம் பாலம் கட்டப்படாமல் பழையபடி இருக்குமேயானால் அவன் மருத்துவமனைக்குச் செல்ல எவ்வளவு நேரமாகும்? என்ன வசதி இருக்கும்? ஆனால் இன்றைக்கு எவ்வளவு விரைவிலே மருத்துவமனைக்கு செல்ல முடியும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால்தான் பொதுவாக இந்தப் பாலம் எப்படியெல்லாம் பயன்படும் என்ற உண்மையை உணர முடியும்.

### சமுதாயத்தின் மொத்த நலன் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும்

அதை உணர முடியாவிட்டால், தனக்கென்ன என்று மாத்திரம் நினைப்பவர்களாக நாம் இருப்போமேயானால் இதனுடைய உண்மையான பயன்களை நாம் தெரிந்து கொள்ள இயலாது. சமுதாயத்தினுடைய மொத்த நலன், மக்களுடைய பொதுவான நலம் இவைகளைப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும். அந்த வகையில் இந்தப் பாலம் எப்படியெல்லாம் பயன்படும் என்பதை இந்தப் பகுதியிலே உள்ள நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இந்தப் பாலம் எண்ணூர் போன்ற பகுதிகளில் வளர்ந்து வருகிற பல தொழிற்கூடங்களை இணைப்பதற்குப் பயன்படுகிறது. அவ்வளவு ஏன்? எங்கள் தலைவர் அண்ணன் அவர்கள் உருவாக்கிய அறிவகத்தையும் அதே அண்ணன் உருவாக்கிய அன்பகத்தையும் இணைக்கின்ற பாலமாகவும் இந்தப் பாலம் இன்றைக்கு பயன்படுகிறது. நான் அந்த இரண்டு கட்டடங்களைக் குறிப்பிடவில்லை. அறிவையும் அன்பையும் குறிப்பிடுகிறேன். அன்பையும் அறிவையும் இணைக்கின்ற பாலமாக இந்த இராயபுரம் பாலம்

**சமுதாயத்தில் மாற்றம் செய்ய விரும்பும் போது உலகத்தில் எதிர்ப்பு வருவது இயற்கையே; மாறுதல் செய்ய விரும்புபவர்கள் கீழே விழுந்து பல கஷ்டங்களை அனுபவித்துதானே ஆகவேண்டும்.**

**– தந்தை பெரியார்**

இன்றைக்கு அமைந்திருக்கின்றது என்பதையும் நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது.

இந்த ஆட்சி அமைந்த பிறகு நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல நான்காவது முறையாக அமைந்த பிறகு இந்தப் பாலத்தின் வேலைகள் முற்றுப் பெற்றன என்றாலும் தம்பி மேயர் ஸ்டாலின் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல 1989–90 ஆண்டில் நாங்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த போதுதான் இராயபுரத்தில்கடற்கரை சாலையில் ரெயில்வே நிலையக் கடவுக்குப் பதிலாக புதிய ரெயில்வே மேம்பாலம் ஒன்றை அமைத்திட முடிவெடுக்கப்பட்டது. அதன்படி இந்த மேம்பாலத்தை அமைத்திட பத்து கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் செலவிடுவது என்று முடிவெடுத்து 22–10–1990ஆம் ஆண்டில் எங்கள் அரசு அதற்கான ஆணையைப் பிறப்பித்தது.

ஆனால் இந்தப் பாலத்திற்கு இப்போது 17 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறதென்றால் இடையிலே ஏற்பட்ட தொய்வுதான் அதற்குக் காரணம். பணிகள் நடைபெறாமல் இருந்தது. பணிகளைப் பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்ததுதான் இதற்குக் காரணம்.

இந்த 17 கோடி ரூபாயில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு, நான் சொல்வது கொடுத்த பங்கை சொல்கிறேன், எடுத்த பங்கை அல்ல, இந்தப் பணிக்காக கொடுத்த பங்கு எவ்வளவு என்று பார்த்தால் – தமிழக அரசின் சார்பில் 12.66 கோடி ரூபாயும், ரெயில்வே நிர்வாகத்தின் சார்பில் 3.69 கோடி ரூபாயும், சென்னை துறைமுகத்தின் சார்பில் 65 இலட்ச ரூபாயும் பங்காகத் தரப்பட்டு இந்தப் பாலத்திற்குரிய நிலம் கூட ரெயில்வே துறையிடமிருந்து இரண்டு கோடி ரூபாய் செலவிலே வாங்கப்பட்டு இந்தப் பாலம் இங்கே அமைந்திருக்கின்றது.

### சென்னை மாநகர பாலங்களிலேயே மிக நீளமான பாலம்

இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 1010 மீட்டர். சென்னை மாநகரத்திலே உள்ள பாலங்களிலேயே மிக நீளமான பாலம் இந்த மேம்பாலம் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே நேரத்தில், ஒரே திசையில் நான்கு வாகனங்கள் செல்லக்கூடிய ஒரே

மேம்பாலமும் இதுதான் என்று இதனுடைய சிறப்பு அம்சத்தை பொறியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தப் பாலத்தைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் பாலத்தினுடைய மேம்பாட்டை அடிக்கடி கவனிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தாமல் அவர்களே கவனித்து இந்தப் பாலத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஒரு அரசாங்கத்திற்கு அல்லது ஒரு மாநகராட்சி மன்றத்திற்கு மாத்திரம் உரிய பொறுப்புக்கள் அல்ல அவைகள். கட்டப்பட அல்லது அமைக்கப்பட்ட எந்தவொரு கட்டடமாக இருந்தாலும் அவற்றை அரசாங்கமோ, மாநகராட்சி மன்றமோ, அதிகாரிகளோ மாத்திரம் கவனித்து அதனுடைய மேம்பாட்டை தொடர்ந்து காப்பாற்றுவது என்பது தேவையன்றாலுங்கூட அதற்கு உதவியாக, துணையாக இருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பொது மக்களுக்கு இருக்கின்றது.

நான் பல வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். சென்ற ஆண்டு கூட சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று வந்தேன். அங்கெல்லாம் உள்ள சாலைகளைக் காணும்போது இப்படிப்பட்ட நிலை நம்முடைய தமிழகத்திலே உள்ள நகரங்களிலே ஏற்பட வேண்டுமே என்கின்ற கவலை என்னை வெகுவாகப் பாதித்தது உண்டு. நம்முடைய மேயர்களை நான் சந்திக்கும் நேரத்தில் எல்லாம் அவர்களிடம் நான் கூறிக் கொண்டிருக்கிறேன். சிங்கப்பூரைப் போல, கோலாலம்பூரைப் போல அங்கேயுள்ள சாலைகளைப் போல தமிழ்நாட்டின் சாலைகளும் உருவாக வேண்டும். அதிலே அக்கறை காட்டுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு துணையாக என்னாலான உதவிகளை அவர்களுக்குச் செய்து கொண்டிருக்கிறேன்.

நேற்றைக்கு முன்தினம் மதுரை மாநகரத்திலே மதுரா கோட்ஸ் ரெயில்வே மேம்பாலத்தினைத் திறந்துவைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அது எவ்வளவு பயனுள்ள பாலமாக அமைந்திருக்கிறது என்பது மாத்திரமல்ல, மதுரையிலே அமைந்திருக்கின்ற மேம்பாலங்கள் அத்தனையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்ட மேம்பாலங்கள். அதுமாத்திரமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற மேம்பாலங்களானாலும் சரி, அல்லது ஆற்றைக் கடக்கின்ற பாலங்களானாலும் சரி அல்லது வேறு பாலங்களானாலும் சரி, எந்தப் பாலங்களானாலும் நூற்றுக்கு 95 பாலங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பாலங்கள்தான் என்பதை எந்த மேடையிலே நின்றும் அறைகூவல் விட்டு யார் எதிர்த்து பேச வரினும் நான் அவர்களை வெற்றி கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதையும் நான் இந்த விழாவிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

காரணம் கட்டுமானப் பணிகள் ஒரு நாடு வளர மிக மிகத்தேவை. அவசியமாகத் தேவை. கட்டுமானப் பணிகள் என்றால் போக்குவரத்து அந்தப் பணிகளிலே ஒன்று. கப்பல் போக்குவரத்து, ரெயில்வே போக்குவரத்து, பேருந்து போக்குவரத்து, சாலைகள், குடிதண்ணீர், விமான போக்குவரத்து இவைகள் எல்லாம் கட்டுமானப் பணிகளிலே அடங்கும். அந்தக் கட்டுமானப் பணிகள் இருந்தால் தான் பெரும் தொழில்கள், கனரக தொழில்கள் உருவாக முடியும். அந்தப் பணிகள் திறம்பட செம்மையாக இருந்தால்தான் வெளிநாட்டிலே உள்ள தொழில் அதிபர்களைக் கூட ஈர்க்கத் தக்க வகையிலே அவை அமையும்.

அப்படி அமைந்த காரணத்தால்தான் இன்றைக்கு இந்தியாவிலே தொழில் முதலீட்டில் முதல் இடத்தை பெறுகின்ற அளவிற்கு மராட்டியத்தை வென்று முதல் இடத்திற்கு தமிழ்நாடு இன்றைக்கு வந்திருக்கிற தென்றால் கட்டுமானப் பணிகளிலே நாம் செலுத்திய கவனம்தான் அதற்குக் காரணம் என்பதை உங்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நாம் உருவாக்குகின்ற கட்டுமானப் பணிகள் திறம்பட வலுவாக செம்மையாக இருப்பதற்கும், நாம் அமைக்கின்ற சாலைகள் ஒழுங்காக நேர்த்தியாக விளங்குவதற்கும் அதிகாரிகள், அரசுகள், உள்ளாட்சி மன்றங்கள் மாத்திரம் கடமையாற்றினால் போதாது. பொது மக்களும் இது நமக்காக உருவாக்கப்பட்ட நம்முடைய சொத்து என்ற உணர்வைப் பெற்றாக வேண்டும்.

ஒரு சின்ன விஷயம். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் நான் தேடித் தேடிப் பார்த்தேன். காரில் செல்லும் போதும் பார்த்தேன். நடந்து சென்றால் சென்னையைப் போல யாரும் சூழ்ந்து கொள்ள முடியாது. காரணம் இங்கே தெரிகின்ற அளவிற்கு அங்கே என்னை அடையாளம் தெரியாது என்பதால் சில இடங்களில் நடந்து சென்றும் பார்த்தேன். எங்கேயாவது ஒரு தூசு கிடக்கிறதா, ஒரு துண்டுத் தாள் கிடக்கிறதா, ஒரு குப்பைத் துளி கிடக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தேன். எங்கும்

**உழைப்பினாலும் சிந்தனையாலும்**
**இந்த உலகை உயர்த்துகிறவர்கள்**
**யாரோ, அவர்களின் காலடிகளில்**
**இந்தப் பூமி தன்னைத்தானே**
**சமர்ப்பித்துக்கொள்கிறது.**

**– மு. மேத்தா**

காண முடியவில்லை. ஆனால் நம்முடைய நகரங்கள் பலவற்றில் எங்கேயாவது ஒரு சுத்தமான இடம் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்க்க அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

உடனே பத்திரிகைக்காரர்கள் சென்னையே அப்படித்தான் இருக்கிறது என்று கருணாநிதியே மேயர் முன்னிலையில் கல்வி அமைச்சர் முன்னிலையில் ஒத்துக் கொண்டார் என்று எழுத நேரிடும். அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் அப்படி எழுதுவதால் நான் வருத்தப்படுவதும் இல்லை. அப்படி எழுதினாலாவது நம்முடைய மக்கள் நிர்வாகத்தோடு ஒத்துழைத்து நேர்த்தியான முறையில் நகரத்தை வைத்துக்கொள்ள முன்வர மாட்டார்களா என்கின்ற அந்த ஆர்வமும் ஆவலும் எனக்கு நிரம்ப உண்டு. ஒரு துண்டுத் தாளைக்கூட கீழே போடாத அந்தப் பண்பாடு நமக்கு வந்தாக வேண்டும்.

### குப்பைகளை சாலைகளில் போட்டுவிட்டுப் போவது முறையா?

நாம் என்ன செய்கிறோம்? பீடி பிடிப்பவர்கள், சிகரெட் பிடிப்பவர்கள் எல்லாம் அதைப் பிடித்து விட்டு கடைசியாக அதை ஒரு ஓரத்திலே போடலாம் என்று கருதுகிறார்களா? பிடித்து முடித்ததும் அதனை நடுச் சாலையிலே போட்டுவிட்டுப் போகிறவர்கள் எத்தனை பேர்? அப்படி போடுவது நியாயமா? முறையா?

நடுச் சாலையிலே என்ன கிடக்கலாம்? குதிரைகளின் குளம்படிகளிலே இருக்கின்ற இலாடங்கள் கிடக்கலாம்? ஏனென்றால் அவைகள் தூய்மைப் பற்றி அறிய மாட்டா, ஆனால் மனிதர்கள் பீடிகளின் சிகரெட்டுகளின் துண்டுகளைப் போட்டு விட்டுப் போகலாமா? தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய வீட்டுத் தாய்மார்கள் பொதுக்கழிப்பிடங்கள் இருந்தால்கூட அதை தங்கள் வீட்டுக் குழந்தைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணுவதில்லை. அந்தக் குழந்தைகளை அங்கேதான் சென்று மலம் கழிக்க வேண்டும், சிறுநீர் கழிக்க வேண்டுமென்று பழக்குவதற்கும் தயாராக இல்லை. அந்தப் பழக்கத்தையெல்லாம் இளமையிலேயே உண்டாக்க வேண்டும். பொதுக்கழிப்பிடம் எங்கேயிருக்கிறது என்று கேட்டால் இல்லை என்றாவது சொல்லுங்கள். அந்தக் குறையைத் தீர்த்து வைக்க நான் தயாராக இருக்கிறேன். அதற்கு வேண்டிய உடனடி நடவடிக்கைகளை எடுக்கவும் தயாராக இருக்கிறேன். இருக்கின்ற கழிப்பிடங்களைப் பயன்படுத்திக் கொள்ள நம்முடைய அருமைத் தாய்மார்களும், சகோதரிகளும் தங்களுடைய குழந்தைகளை அந்தப் பழக்கத்திற்கு ஆட்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாலிபர்களானாலும் பெரியவர்களானாலும் ஒரு துண்டுத் தாளைக் கூட நடு வீதியிலே போடக் கூடாது. ஓரமாகப் போட வேண்டும். எங்கே குப்பைத் தொட்டி இருக்கிறதென்று பார்த்துப் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

### நம்முடைய நகரை நாம்தான் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்

மாநகராட்சி மன்றத்திலே ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வரப் போவதாக மேயர் குறிப்பிட்டிருக்கிறார். மாநகராட்சி மன்றச் செய்திகளும் கூறுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் தம்பு குப்புசாமியும் என்னிடத்திலே அதைச் சொன்னார். வரும் பொங்கல் முதல் தனியார் மூலமாக குப்பைகளை அகற்றுகின்ற ஏற்பாடு நடைபெறப் போவதாக, மதுரை மாநகரத்திலே அந்த ஏற்பாடு இப்போது தொடங்கப்பட்டு மிக துல்லியமாக பல சாலைகள் காட்சி தருகின்ற நிலையை நான் நேரிலே கண்டு வந்தேன். அப்படி தனியார்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற காரணத்தால் ஏற்கெனவே பணியாற்றிய எந்தத் தொழிலாளர்களுக்கும் வேலை பாதிக்கப்படாது என்ற அந்த உத்தரவாதமும் அவர்களுக்கு அளிக்கப்படும் சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதனை மனதிலே வைத்து தனியார் மூலமாக நடைபெறுகின்ற அந்தக் குப்பைகளை அகற்றுகின்ற, நகரைச் சுத்தப்படுத்துகின்ற அந்தப் பணியை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நகரம், நாம்தான் அதனை தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நம்மை நாமே அசிங்கப்படுத்திக் கொள்வதாக ஆகிவிடும் என்பதை மனதிலே பதிய வைத்துக் கொள்ளவேண்டும். எதுவும் நம்மால், நமக்காக, நம்முடைய எதிர்கால சந்ததிக்காக நடைபெறுகின்ற காரியங்கள். சர்க்கார் என்பது எங்கிருந்தோ வந்து குதித்ததல்ல. நாமே உருவாக்கிய ஒன்றுதான். அந்தச் சர்க்கார் நமக்காக நடைபெறுகின்ற சர்க்கார்தான். நகராட்சி மன்ற நிர்வாகமானாலும், மாநகராட்சி நிர்வாகமானாலும், அரசாங்க நிர்வாகமானாலும் அவைகள் எல்லாம் நாம் நடத்துகின்ற நிர்வாகம்தான். நமக்கு பதிலாக – நமக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால், இவர்கள் அந்தப பணியை ஆற்றுகிறார்கள், நாம் அவர்களுக்கு ஒத்துழைப்பு தருவோம் என்கின்ற அந்த உணர்வைப் பெறுவீர்களேயானால் எல்லோரும் சேர்ந்து தமிழ்நாட்டை இன்னும் வளப்படுத்த முடியும், வலுப்படுத்த முடியும், வாழ்வளிக்க முடியும் என்று கூறி இந்தப் பாலம் திறப்பு விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*– சென்னை இராயபுரம் மேம்பாலத்தினை 15-11-99 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# கல்கியின் படைப்புகளை கடைசித் தமிழன் உயிரோடு இருக்கின்ற வரையிலே மறக்க முடியாது

**– முதலமைச்சர் கலைஞர்**

அறிவூட்டுகின்ற அற்புதமான படைப்புகளை தமிழ் நிலத்திற்கு வழங்கியவர் மறைந்தும் மறையாத மாணிக்கம் பேராசிரியர் கல்கி என்பதை தமிழன் வாழ்கின்ற வரையிலே, கடைசித் தமிழன் உயிரோடு இருக்கின்ற வரையிலே மறக்க முடியாது.

அத்தகைய கல்கி அவர்களுடைய நூல் ஒன்று ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்டு அதுவும் மிக அருமையாக மொழி பெயர்க்கப்பட்டு நம்முடைய அருமை நண்பர் கார்த்திக் நாராயண் அவர்களுடைய கை வண்ணம் பெற்ற அந்த நூல் வெளியிடுகின்ற நேரத்தில் அதை வெளியிடுகின்ற பேற்றினை எனக்கு கிட்டியமைக்காக இந்தப் பேறினை எனக்களித்த இந்தப் பதிப்பகத்தாருக்கு குறிப்பாக பெருமாட்டி சிவகாமி ஆச்சியாருக்கு என்னுடைய இதய மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.




**நானும் இளமைக் காலத்திலே இத்தொடர்கதையைப் படித்தவன்**

பொன்னியின் செல்வன் தொடர் கதையை நானும் என்னுடைய இளமைப் பருவத்திலே தொடர்ந்து படித்தவன். பிறகு அது நூல் வடிவிலே வந்த போதும் அதைப் படித்து மகிழ்ந்தவன். இப்போது ஆங்கிலத்தில் அது மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையிலும் அதைப் படிக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. உடல்நலக் குறைவு ஏற்பட்டதும் ஒரு வகையிலே நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் இந்த ஆங்கில ஆக்கம் பொன்னியின் செல்வனை நான் முழுமையாகப் படித்திருக்க இயலாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக குறிப்பெடுத்துக் கொண்டு வந்து எல்லாவற்றையும் படித்ததைப் போல இங்கே நடித்து விட்டுப் போயிருக்க வேண்டும். ஆனால் Bed Rest என்பார்கள், அதைப்போல படுத்துக் கொண்டே இருக்க வேண்டும், எழக்கூடாது என்ற மருத்துவர்களுடைய கட்டளையை யேற்று படுக்கையிலேயே ஐந்து நாட்கள் இருந்த காரணத்தினால் அந்த ஆங்கில நூல் முழுமையாகவும் படிக்க முடிந்தது. அதுமாத்திரமல்ல, ஆங்கில நூல் சரியாக வெளி வந்திருக்கிறதா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க பொன்னியின் செல்வன் தமிழ் நூலையும் படிக்கின்ற அந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அந்த ஓய்வு போதாமல் இன்று காலையிலிருந்து மாலையிலே சென்ட்ரல் ரயில்வே நிலையத்திற்கு-செல்கின்ற வரையிலே அந்தத் தமிழ் நூலையும் படித்து விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்.

அதனால்தான் ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று பதிப்பகத்தாரோ, ஆசிரியரோ என்னைக் கேட்கும் போது நான் சற்றுத் தயக்கம் காட்டுவேன். காரணம், படித்து விட்டல்லவா பேச வேண்டும் என்பதற்காக! இல்லையேல், முதல் பக்கம், இடையிலே இரண்டு பக்கம் கடைசி பக்கம் இவைகளைப் படித்து விட்டு முழுதும் படித்ததைப் போல பாவனை காட்டி விட்டுப் போகின்ற பழக்கம் எனக்கு எப்போதும் இல்லை. இனியும் இருக்கக்கூடாது என்று நான் இயற்கையை வேண்டுகிறேன்.

இந்த நூல் பேராசிரியர் கல்கி அவர்களால் தொடர் ஓவியமாக 1950ஆம் ஆண்டு எழுதப்பட்டது. ஐந்து பாகங்களாக எழுதப்பட்டது. முதல் பாகம்தான் இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்து அடுத்து வரும் பாகங்களும் விரைவிலே வெளிவரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையும் வெளியிடும் வாய்ப்பு எனக்கே கிடைக்குமென்று நான் எண்ணுகின்றேன்.

பதிப்பகத்தார் இந்த நூலை வெளியிடும் வாய்ப்பை அளித்தது மாத்திரமல்லாமல், இந்திய நாட்டிலே



ஆண்டுகளாகிறது — இந்தக் கதை நிகழ்ந்தது என்பதை நினைவிலே நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

முதல் பாகம் வீராணம் ஏரிக் கரையிலே தொடங்கி அது மாமல்லபுரம் கடற்கரையிலே முடிவடைகிறது. வீராணம் ஏரிக்கரையிலே முதல் பாகம் தொடங்குகிற போது வந்தியத்தேவன் வருகிறான்; அவன் ஏறிச் செல்கிற வாட்டசாட்டமான குதிரையைக் காணுகிறோம்; ஆழ்வார்க்கடியானை காண்கிறோம்; சைவப் பெரியாரைக் காண்கிறோம்; தொடர்ந்து பல கதாபாத்திரங்களை காண்கிறோம். மாமல்லபுரம் கடற்கரையிலே முதல் பாகம் நிறைவுறுகிற நேரத்தில் சோழ சாம்ராஜ்யத்தை சாய்ப்பதற்காக நடைபெற்ற சதிகள் ஒரு கட்டத்திலே அம்பலமாகி அந்தச் சதி வேலைகளை எப்படி சந்திப்பது என்ற முயற்சிகளை மேற்கொள்ளுகின்ற நிலையோடு முதல் பாகம் முடிவடைகிறது.

ஒரிசா மாநிலத்தில் துன்பத் துயரத்தால் வாடி வேதனைக்கு ஆளாகியிருக்கின்ற ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் பசித்த வயிற்றோடு அலைந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு உலகம் முழுதும் இருந்து வருகின்ற உதவிகளோடு தமிழகத்தின் சார்பாக நாம் அளிக்கின்ற உதவியும் இருக்கட்டும் என்று பெருமனதோடு ஒரு இலட்சம் ரூபாயை நிதியாக வழங்கியமைக்கும் நான் தமிழக அரசின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்தக் கதை நிகழ்ந்து 1032 ஆண்டுகளாகிறது

ஐம்பதாம் ஆண்டு இந்த நூல் எழுதத் தொடங்கப்பட்டது என்ற குறிப்பைக் காணும்போது முதல் பக்கத்திலேயே பேராசிரியர் கல்கி குறிப்பிடுகிறார்: "இன்றைக்கு தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக" என்றுதான் அவர் பொன்னியின் செல்வனைத் தொடங்குகிறார். அதோடு இப்போது ஐம்பதாண்டுகளை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். கதை நடந்த காலம் கல்கி அவர்களுடைய கூற்றுப்படி, அவர் எழுதிய போது உள்ள கூற்றுபடி 982 ஆண்டுகளுக்கு முந்திய காலம். இப்போது அதனுடைய ஆங்கிலப் பதிப்பு வெளியிடுகின்ற காலம் 982ஐயும் ஐம்பதையும் கூட்டினால் 1032

## அன்றைக்கும் மதச் சண்டை இருந்தது

எக்காலத்திற்கும் பொருந்துவதாக பொன்னியின் செல்வன் நூல் அமைந்திருக்கின்றது. ஆனால் ஒன்று. இது எதிர்காலத்திற்கு பொருந்துவதாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய விருப்பம். என்ன இப்படி பேசுகிறாரே என்று கருதாதீர்கள். இந்தக் கதை தொடங்குகிற காலம் — இதை பேராசிரியர் கல்கி எழுதுகிற காலம் எப்படியிருந்ததோ அதே நிலை தான் இன்றைக்கும் தமிழ்நாட்டிலே இருக்கிறது. அன்றைக்கும் மதச்சண்டை இருந்தது. இன்றைக்கும் மதச் சண்டை, மதவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன. அன்றைக்கு அருள்மொழி வர்மன் இலங்கை சென்று போரிட்டான். இலங்கையிலே அன்றைக்கும் போர் நடந்தது. இன்றைக்கும் ...நான் நிறைவு செய்ய விரும்பவில்லை. நீங்களே கோடிட்ட இடத்தை நிறைவு செய்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையால் பொன்னியின் செல்வன் எழுதத் தொடங்கிய காலம் அல்லது அந்தக் கதை ஆரம்பித்த காலத்தில் எப்படி தமிழகத்தின் சூழல் இருந்ததோ அதைப் போலவே இன்றைக்கும் அந்தச் சூழல் இருக்கிறது. நான் குறிப்பிட்ட ஆழ்வார்க்கடியானும் சைவ பெரியவரும் எப்படி தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள் என்பதை மத மாச்சரியம் எப்படி வெளிப்பட்டது என்பதை பேராசிரியர் கல்கி அவர்கள், அவருக்கே உரிய நடையில் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்திலே 94ஆம் பக்கம் முதல் 97ஆம் பக்கம் வரை குறிப்பிடுகிறார்.

"ஆழ்வார்க்கடியான் படகில் ஏறியதை ஆட்சேபித்து சைவப் பெரியார், படகு நகரத் தொடங்கியதும்; வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! உனக்காகப் போனால் போகிறது என்று இவனை ஏற விட்டேன். ஆனால் ஓடத்தில் இருக்கும் வரையில் அவன் அந்த எட்டெழுத்துப் பெயரைச் சொல்லவே கூடாது.

(எட்டெழுத்தென்றால் ஓம் நமோ நாராயணா) சொன்னால், இவனை இந்தக் கொள்ளிடத்தில் பிடித்துத் தள்ளி விடச் சொல்லுவேன். ஓடக்காரர்கள் என்னுடைய ஆட்கள்!" என்றார்.

இதனை மொழிபெயர்த்த நம்முடைய நண்பர் அவர்கள்,

As soon as the boat began to move, the Veerasaivite Bhat who had objected to being in it with Azhwarkadiyan Nambi said to Vandiyathevan, ``Thambi! I allowed him to come with us for your sake. But, as long as he is in the boat he must not utter that eightsyllabled (Om Namo Narayana) word. If he does, I will see that he is pushed into the Kollidam. The boatmen are under my orders".

(உடனே வந்தியத்தேவன்).

"நம்பி அடிகளே! தங்களுடைய திருச் செவியில் விழுந்ததா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

``Nambi! Did that fall on your sacred ears?'' asked Vandiyathevan.

(உங்களுடைய புனிதமான காதுகளில் இந்த வார்த்தைகள் விழுந்ததா என்று கேட்கிறான். புனிதமான காதாம், இப்போது யார் யாரோ புனிதம் என்று போட்டுக் கொள்கிறார்கள்)

"இவர் ஐந்தெழுத்தைப் பெயரைச் சொல்லாதிருந்தால் நானும் எட்டெழுத்துத் திரு நாமத்தைச் சொல்லவில்லை!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சாட்ஷாத் சிவபெருமானுடைய பஞ்சாட்சரத் திருமந்திரத்தைச் சொல்லக்கூடாது என்று இவன் யார் தடை செய்வதற்கு?

***கற்றூணைப் பூட்டி கடலிற் பாய்ச்சினும்***
***நற்றுணையாவது நமச்சிவாயவே!"***

என்று சைவப் பெரியார் கம்பீர கர்ஜனை செய்தார்.

***"நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்.***
***நாராயணா என்னும் நாமம்!"***

— என்று ஆழ்வார்க்கடியான் உரத்த குரலில் பாடத் தொடங்கினான்.

"சிவ சிவ சிவா!" என்று சைவர் இரண்டு காதிலும் கை விரலை வைத்து அடைத்துக் கொண்டார்.

ஆழ்வார்க்கடியான் பாட்டை நிறுத்தியதும், சைவர் காதில் வைத்திருந்த விரல்களை எடுத்தார்.

## படகிலே மோதிக்கொண்ட சைவரும் வைணவரும்

ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! நீயே அந்த வீர சைவரைக் கொஞ்சம் கேள். இவர் திருமாலின் பெயரைக் கேட்பதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறாரே? ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளின் பாத கமலங்களை அலம்பி விட்டுத்தான் இந்தக் கொள்ளிட நதி கீழே வருகிறது. பெருமாளின் பாதம்பட்ட தீர்த்தம் புண்ணிய தீர்த்தம் என்று சிவபெருமான் திருவானைக்காவலில் அந்தத் தண்ணீரிலேயே மூழ்கித் தவம் செய்கிறார் அல்லவா?" என்று சொல்லுவதற்குள்ளே, சைவப் பெரியார் மிக வெகுண்டு ஆழ்வார்க்கடியான் மீது பாய்ந்தார். படகில் ஓரத்தில் இரண்டு பேரும் கைகலக்கவே, படகு கவிழ்ந்து விடும் போலிருந்தது. ஓடக்காரர்களும் வந்தியத்தேவனும் குறுக்கிட்டு அவர்களை விலக்கினார்கள்.

"பக்த சிரோமணிகளே! நீங்கள் இருவரும் இந்தக் கொள்ளிட வெள்ளத்திலே விழுந்து நேரே மோட்சத்துக்குப் போக ஆசைப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் எனக்கு இன்னும் இந்த உலகத்தில் செய்ய வேண்டிய காரியங்கள் மிச்சமிருக்கின்றன!'' என்றான் வந்தியத்தேவன்.

ஓடக்காரர்களில் ஒருவன், ''கொள்ளிடத்தில் விழுந்தால் மோட்சத்துக்குப் போவது நிச்சயமோ, என்னமோ தெரியாது! ஆனால் முதலையின் வயிற்றுக்குள் நிச்சயமாகப் போகலாம்! அதோ பாருங்கள்!'' என்றான்.

(கல்கி அவர்கள் அப்போதே பகுத்தறிவு சிந்தனையோடு இதிலே எனக்கு வேண்டியதை நான் எடுத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். எனக்கு வேண்டியதையும் நமக்கு வேண்டியதையும் கல்கி எழுதியிருக்கிறார் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்)

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் முதலை ஒன்று பயங்கரமாக வாயைத் திறந்து கொண்டு காணப்பட்டது.

"எனக்கு முதலையைப் பற்றிச் சிறிதும் அச்சம் இல்லை; கஜேந்திரனை ரட்சித்த ஆதிமூலமான நாராயண மூர்த்தி எங்கே போய் விட்டார்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

''எங்கே போய் விட்டாரா? பிருந்தாவனத்து கோபிகா ஸ்திரீகளின் சேலைத் தலைப்பில் ஒரு வேளை ஒளிந்து கொண்டிருப்பார்!" என்றார் சைவர்.

(நான் சொல்லவில்லை — கல்கி சொல்கிறார்)

''அல்லது பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்து விட்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடியது போல் சிவனுக்கு இன்னொரு சங்கடம் ஏற்பட்டிருக்கலாம்; அந்தச் சங்கடத்திலிருந்து சிவனைக் காப்பாற்றுவதற்காகத் திருமால் போயிருக்கலாம்" என்றான் நம்பி.

"திரிபுர சம்ஹாரத்தின் போது திருமால் அடைந்த கர்வபங்கம் இந்த வைஷ்ணவனுக்கு ஞாபகம் இல்லை போலிருக்கிறது!" என்றார் சைவப் பெரியார்.

"சுவாமிகளே! நீங்கள் எதற்காகத்தான் இப்படிச் சண்டை போடுகிறீர்களோ, தெரியவில்லை! யாருக்கு எந்தத் தெய்வத்தின் பேரில் பக்தியோ, அந்தத் தெய்வத்தை வழிபடுவதுதானே?" என்றான் வந்தியத்தேவன்.

**மத நல்லிணக்கத்தை வலியுறுத்திய கல்கி**

வந்தியத்தேவன் கூறும்போது ஒரு மதத்தை அல்லது ஒரு தெய்வத்தைக் குறை கூறி தகராறு வேண்டாம், மத மோதல் வேண்டாம், மதப் பிரச்சினை வேண்டாம், மத வாதங்கள் வேண்டாம், மத நல்லிணக்கம் வேண்டும் என்பதை வந்தியத்தேவன் வாயிலாக பேராசிரியர் கல்கி அவர்கள் இதிலே நிலை நாட்டுகிறார்.

கல்கியின் எழுத்திலே உள்ள அழகு, நயம், உவமை நிகழ்ச்சிகளை படம் பிடித்துக்காட்டுகின்ற தன்மை ஆகியவற்றை ஒரு எடுத்துக்காட்டு 115வது பக்கத்தில் 14ஆம் அத்தியாயத்தில் உள்ளது.

"சில வீடுகளில் வாசல்களில் நெல் உலரப் போட்டிருந்தார்கள். அந்த நெல்லைக் கோழிகள் வந்து கொத்தித் தின்று விட்டு, "கொக்கரக்கோ!" என்று கத்திக் கொண்டு திரும்பிப் போயின. நெல்லைக் காவல் காத்துக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் அக்கோழிகளை விரட்டி அடிக்கவில்லை."

(இதென்ன நியாயம் என்று கேட்கலாம். காயப் போட்டிருந்த நெல்லை கோழிகள் தின்றுவிட்டுப் போகின்றன. அதற்கு காவல் நிற்கும் பெண் குழந்தைகள் அந்தக் கோழிகளை விரட்டியடிக்கவில்லையாம். காரணம் அவரே சொல்கிறார்)

"கோழி அப்படி எவ்வளவு நெல்லைத் தின்று விடப் போகிறது?" என்று அலட்சியத்துடன் அக்குழந்தைகள் சோழியும் பல்லாங்குழியும் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

கோழி கொத்துகின்ற நெல் ஒரு கலமா, இரண்டு கலமா, ஒரு மூட்டையா, இரண்டு மூட்டையா? கொஞ்சம் நெல்லைத்தான் அவைகள் கொத்திக் கொண்டு போகப் போகின்றன. அதனால் அவைகளை விரட்ட வேண்டிய அவசியமில்லை என்று அந்த நெல்லின் அளவைப் பொறுத்து அவைகளை விரட்டாமலேயே அந்தக் குழந்தைகள் இருந்து விட்டார்கள் என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

இது சோழ சாம்ராஜ்யத்திலே ஏற்பட்ட அரசு கிரீடம் யாருக்கு என்ற சிக்கலின் அடிப்படையிலே எழுந்த ஒரு போராட்டத்திலே காதல், கனிவு, போராட்டம், வாள், வேல் மோதுதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்ற ஒரு அருமையான கதையைத்தான் நமக்கு பேராசிரியர் கல்கி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

சுந்தரச் சோழனுடைய மக்கள் — ஆதித்தகரிகாலன், அருள்மொழிவர்மன், ஆதித்த கரிகாலன் காஞ்சிபுரத்திலே இருந்து காவல் அரணாக சோழ மண்டலத்தைக் காப்பாற்றி வந்தான்.



அருள்மொழி வர்மன் இலங்கையிலே உள்ள சிங்களவர்களால் சோழ நாட்டிற்கு வரவிருந்த ஆபத்தைத் தடுக்க அங்கேயே பாசறை அமைத்து போரிட்டுக் கொண்டிருந்தான். அதற்கிடையே தோன்றிய சில வஞ்சகர்கள், வஞ்சகிகள் சோழ சாம்ராஜ்யத்தை சீர்குலைக்க வேண்டும். தாங்கள் விரும்புகின்றவர்கள்தான் பட்டத்திற்கு வர வேண்டும் என்கிற முனைப்போடு ஆற்றிய கொடுஞ்செயல் ஆகியவற்றையெல்லாம் கொண்டதுதான் இந்தப் பெருஞ் சித்திரம்.

**ஒவ்வொரு அத்தியாயத்திலும் கல்கியின் முன்னுரை**

இதிலே எந்தவொரு அத்தியாயத்திலும் கல்கி அவர்கள் ஒரு முன்னுரை எழுதாமல் இருப்பதில்லை. அந்த அத்தியாயத்தைப் பற்றி விவரிக்காமல் இருப்பதில்லை. வரப் போகிற நிகழ்ச்சியைக் கோடிட்டுக் காட்டாமல் இருப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் இன்றைய எழுத்தாளர்கள் கைவிட்டு விட்ட ஒரு பழக்கம். ஆனால் 50ஆம் ஆண்டு வாக்கில் பேராசிரியர் கல்கி கையாண்ட பழக்கம். "நேயர்களே என்னோடு கொஞ்சம் வாருங்கள்" என்று சில இடங்களிலே எழுதுவார்கள். "கடந்த அத்தியாயத்தில் சொன்னேனே, அது ஞாபகத்தில் இருக்கிறதா?" என்று கேட்பார். இப்படி நேயர்களோடு நேருக்கு நேர் பேசுவதைப் போல அவருடைய கதை அமைப்பு — ஒவ்வொரு அத்தியாயத்தின் அமைப்புகளும் இப்பொழுதும் இருக்கின்றன என்பதை எண்ணியெண்ணி நான் ஆச்சரியப்படுகிறேன்.

அதிலே திருப்புறம்பியம் என்கிற ஒரு ஊரைப் பற்றி எழுதியிருக்கிறார். அது எதற்காக வருகிறதென்றால் சில சதிகாரர்கள் அந்தத் திருப்புறம்பியத்திற்கு அருகிலே உள்ள பள்ளிபடைக் கோயில் அமைந்துள்ள இடத்திலே கூடி சதி செய்கிறார்கள். அதை ஆழ்வார்க்கடியான் சதிகாரர்களைத் தொடர்ந்து பின்னாலேயே சென்று ஒரு மரத்திலே ஏறி அமர்ந்து கவனிக்கிறான் என்று கதை போகிறது. பள்ளிப்படைக் கோயில் புதரில் செடி கொடிகளுக்கிடையில் மறைவில் நடைபெற்ற சதியை ஆழ்வார்க்கடியான் மரக்கிளையிலே அமர்ந்து பார்த்தான் என்று முடித்திருக்கலாம். ஆனால் அந்தப் பள்ளிப்படைக் கோயில் என்றால் என்ன என்று விவரிக்க ஆரம்பித்து அதற்கு ஒரு அத்தியாயமே எழுதுகிறார்.

பள்ளிப்படைக் கோயில் என்றால் பழங்காலத்தில் வீரர்கள் போரிலே மாண்டு விட்டால் அவர்களுக்காக எழுப்பப்படுகின்ற நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுகின்ற கோயில் – அது பள்ளிப்படைக் கோயில் என்கின்ற பெயர் பெறும். அப்படிப்பட்ட பள்ளிப்படைக் கோயில் ஒன்று அங்கே இருந்தது என்று சொல்லிவிட்டுப் போகலாம். அந்தப் பள்ளிப்படைக் கோயில் இந்த கதை நடப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே உருவானது என்று கல்கி குறிப்பிடுகிறார். அதாவது இன்றிலிருந்து 1100 ஆண்டுகளாகிறது. ஒரு உவமை சொல்கிறார். வாட்டர்லூ சண்டையைப் போல – பிளாசி யுத்தத்தைப் போல – பானிபட் போராட்டத்தைப் போல திரும்புறம்பியம் என்ற ஊரிலே ஒரு போர் நடைபெற்றது என்கிறார். அந்தப் போரில் பாண்டியர்கள் சோழர்களை அறவே அழித்து விட முனைப்போடு போரிட்டார்கள். அப்படி போரிட்டபோது சோர்ந்து போன படை வீரர்களை இனி வைத்துக் கொண்டு போரிட முடியாது என்று சோழ மன்னனும் பல்லவ மன்னனும் வேறு சில மன்னர்களும் நினைத்து திரும்பக் கொள்ளிடக்கரைக்கே போய் விடலாம் என்று முடிவு செய்கிற நேரத்தில் – இந்த நேரம் தவறினால் சோழ சாம்ராஜ்யமே இல்லாமல் புல் முளைத்துப் போய்விடுமே என்று அஞ்சி கலங்கிய ஒரு கிழவன் – இவர்கள் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கின்ற இடத்திற்கு வருகிறான். அவன் பெயர் விஜயாலய சோழன். அவனுக்கு கால்கள் நடக்க முடியாத அளவிற்கு முடமாகிப் போனவன். போர்க் களத்தில் தொடர்ந்து பல போர்களிலே அவன் பெற்ற வடுக்கள் மட்டும் 96. இதையெல்லாம் கல்கி எழுதியிருக்கிறார்.

**சரித்திர சம்பவங்களை இளைய தலைமுறைக்கு நினைவூட்டிய கல்கி**

அவன் சோழனையும் பல்லவனையும் சந்தித்துச் சொல்கிறான். "ஏன் சோர்ந்து விட்டீர்கள்? இம்முறை நீங்கள் தவறினால் நம்முடைய சோழ நாடு பாண்டியர்க்கும் அதைப் போலவே சிங்களவர்க்கும் அடிமையாகி விடும். எனவே ஒரு யானை இருந்தால் எனக்குக் கொடுங்கள்'' என்று கேட்கிறான். சோர்ந்து போன மன்னர்கள் ஒரு யானை கூட கிடையாது. அனைத்தும் போரிலே மாண்டு விட்டான் என்கிறார்கள். ஒரு குதிரையாவது கொடுங்கள் என்று விஜயாலயன் கேட்கிறான். அதுவும் இல்லை என்கிறார்கள். பரவாயில்லை – சோழநாட்டு சுத்த வீரர்கள் இருவரேனும் மிஞ்சியிருந்தால் வாருங்கள் என்கிறான். இரண்டு பேரென்ன, இருநூறு பேர் இருக்கிறோம். வருகிறோம் என்கிறார்கள். இரண்டு பேர் என்னைத் தூக்கிப்பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த இரண்டு பேர் விஜயாலய சோழனைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள, விஜயாலயன் போர்க்களத்திலே புகுந்து வாள் சுழற்றி வேலேந்தி பகையை வீழ்த்தி பெரும் வெற்றியைப் பெறுகிறான். அந்த வெற்றி பெறுகிற நேரத்தில் பிரதிவீபதி என்கிற கங்க மன்னன், இவர்களுக்கு துணையாக இருந்தவன் வீர மரணம் அடைகிறான். அவனுடைய நினைவாகக் கட்டப்பட்டதுதான் அந்த பள்ளிப்படைக் கோயில், அந்தப் பள்ளிப்படைக் கோயிலுக்கு பக்கத்திலே உள்ள புதரிலேதான் இந்தச் சதியை அவர்கள் நூறாண்டுக்குப் பிறகு நடத்துகிறார்கள் என்று கல்வி எழுதுகிறார் என்றால் சரித்திரச் சம்பவங்களை இளைய தலைமுறைக்கு நினைவூட்டுவதிலே பேராசிரியர் கல்கிக்கு எவ்வளவு அக்கறை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட அருமையான சரித்திரங்களை – வரலாற்று நூல்களை இளம் மனதிலே பதியத்தக்க வகையிலே எழுதி அதற்கு கற்பனை முலாம் பூசி மெருகு கொடுத்து தமிழின்பால் தனக்குள்ள ஆர்வத்தைப் புலப்படுத்துகின்ற வகையிலே இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல திருக்குறளிலிருந்து சிலப்பதிகாரத்திலிருந்து சங்க இலக்கியங் களிலிருந்து இன்னும் சொல்லப் போனால் தானே எழுதிய கவிதைகளையெல்லாம் இடையிடையே சேர்த்து தந்திருக்கின்றன இந்த நூல் – அதனை சிறு பிழையும் இல்லாமல் அற்புதமாக ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார் அருமை நண்பர் கார்த்திக் நாராயண் அவர்கள். அவருக்கும் இதை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமென்று என்னை வருந்தி அழைத்தல்ல –வேண்டு கேட்டுக் கொண்டல்ல – அன்பாக ஆணையிட்டு இதிலே கலந்து கொள்கிற வாய்ப்பை நல்கிய அனைவருக்கும் குறிப்பாக டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

– பேராசிரியர் கல்கி அவர்களது
'பொன்னியின் செல்வன்'
முதல் பாகத்தின் ஆங்கில
மொழியாக்க நூல் வெளியீட்டு விழாவில்
6–11–1999 அன்று
முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

★ ★ ★

# மதுரையில் ரூ.6 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய மேம்பாலம்

மதுரை நகராட்சிமன்றத் தேர்தல் ஒன்று 1969–ஆம் ஆண்டு நடைபெற்ற போது, அன்றைக்கு அந்த நகராட்சிமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வந்த நான், "இந்த நகராட்சிமன்றத் தேர்தலிலே நான் சார்ந்துள்ள இயக்கம் வெற்றி பெறுமேயானால், வெகு விரைவில் இந்த மதுரை நகராட்சியை மாநகராட்சி மன்றமாக உருவாக்குவேன்" என்று உறுதியளித்தேன்.

நான் வழங்கிய உறுதிக்கு ஏற்ப 69ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அளித்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் 71ஆம் ஆண்டு மதுரை நகராட்சியை மாநகராட்சி மன்றமாக ஆக்கி, என்னுடைய அன்பிற்குரிய நண்பர் மதுரை மாவீரர் முத்து அவர்களை முதல் மேயராக ஆக்கி அதைக் கண்டு களித்தவன் நான் என்பதை நீங்கள் வெகு நன்றாக அறிவீர்கள்.

**மூன்று கோடி ரூபாய் அளவிற்கு நலத்திட்ட உதவிகள்**

ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் அளவிற்கான அரசின் நலத்திட்ட உதவிகளை ஏறத்தாழ ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட நலிவுற்ற மக்களுக்கு இங்கே வழங்கப்பட்டிருக்கின்றது. நலிவுற்ற மக்கள் இந்த 5 ஆயிரம் பேரோடு முடிந்துவிடவில்லை. இன்னும் பல இலட்சம் பேர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையைப் போக்க அவர்களுடைய நலிவைப்போக்க, அவர்களின் நன்மையைப் பெருக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது.


அதைப் போலவே இந்த மாநகராட்சியின் அழகை உயர்த்த – தேவைகளையெல்லாம் நிறைவு செய்ய அரசு கடமைப்பட்டிருக்கிறது. மாநகராட்சி மன்றமும் கடமைப்பட்டிருக்கிறது.

இங்கே பாலங்களைப் பற்றி பேசப்பட்டது. இன்னும் வேண்டிய பாலங்கள் எவை எவையென்றெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது. கட்டப்பட்ட பாலங்கள் பற்றிய பழைய வரலாறுகள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டப்பட்டது. 71–76ஆம் ஆண்டில் வைகை வடகரை பாதாள சாக்கடைத் திட்டம், மற்றும் வடகரை குடிநீர்த் திட்டம் ஆகியவை துவக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன என்பதையும், 1975ஆம் ஆண்டில் பெரியார் பேருந்து நிலையம் அருகில் மேயர் முத்து இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்டது என்பதையும் மீனாட்சி மில் அருகே பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்டது என்பதையும், 1989–90ல் தெற்குவாசலில் என்.எம்.ஆர். சுப்புராமன் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட்டது என்பதையும் 1990இல் மதுரை தத்தனேரியில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு உயர் மட்டபாலம் கட்டப்பட்டது என்பதையும் 97– செப்டம்பரில் மதுரை அண்ணாநகரில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப்பாலம் திறக்கப்பட்டது, என்பதையும் ஆரம்பாளையம், அருள்தாஸ்புரம் மற்றும் ஆழ்வார்புரம், ஒப்புலாபடித்துறை ஆகிய இடங்களில் இரண்டு தரைப்பாலங்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டி முடிக்கப்பட்டு 97–ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டன என்பதையும் மேலும் 60 இலட்ச ரூபாய் செலவில் திருமலைராயர் படித்துறையையும், குமரன் சாலையையும் இணைக்கும் மூன்றாவது தரைப்பாலம் கட்டப்பட்டு 98–ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது என்பதையும் இவற்றின் மூலம் வைகை மேம்பாலத்தில் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடி குறைக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட்டு, சுற்றுச் சாலை 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு வேலை நடைபெறுகிறது என்பதையும் எடுத்துக்காட்டி, மதுரை – நெல்லை இருப்புப் பாதை மார்க்கத்திலே ஒரு மேம்பாலம் கட்டப்படுகிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.


இன்னும் தேவைப்படுகின்ற பாலங்களை யெல்லாம் கட்டித் தருவேன். பாலத்தைக் கட்ட என்றைக்கும் நான் மறுக்கமாட்டேன். அதற்கான பலத்தை நீங்கள் எனக்குத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*– மதுரையில் ரூ.6 கோடி செலவில் கட்டப்பட்ட மேம்பாலத்தை 13–11–99 அன்று திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...* ★


# கலைஞர் ஆட்சியில் ஊரக வளர்ச்சி



ஊரகப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டோர், இதர பிரிவிலுள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக வீடுகட்டித் தரும் தொகுப்பு வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.480 கோடியில், 2,53,053 வீடுகள்.




கிராமங்களில் 67,191 புதிய தெருவிளக்குகள், 10,000 சோடியம் ஆவி விளக்குகள்.





தொலைதூரக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில், ரூ.463 கோடியில் 16,927 கி.மீ. தூரமுள்ள கிராமச் சாலைகள் தார்ச் சாலைகளாக நிலை உயர்வு.





மேல்நிலை, உயர்நிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.131 கோடியில், 5,237 கட்டடங்கள்.




ரூ.71 கோடியில், 4,944 நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள்.



ரூ.12 கோடியில்,
1,159 சத்துணவுக் கூடங்கள்.



ரூ.10 கோடியில், 688 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள்.



ரூ.35 கோடியில், 22,053 தொலைக்காட்சிப் பெட்டி அறைகள்.
ரூ.373 கோடியில், 35,508 நீர்பிடிப்புப் பணிகள்.
ரூ.67 கோடியில், 13,533 ஜீவன்தாரா கிணறுகள்.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் கிராமப்புறங்களைச் சார்ந்த 4,76,106 குடும்பங்களுக்கு 602 கோடி ரூபாய் மானியத்துடன் கூடிய கடனுதவி. இதில், 2,26,978 குடும்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்.




44,737 இளைஞர்களுக்கு ரூ.20 கோடியில் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி.






ரூ.5 கோடியில், 26,643 கைவினைஞர்களுக்கு நவீன தொழிற்கருவிகள்.

வருவாய் தரத்தக்க தொழில்களில், குழு செயல்பாட்டு முறையில் ஈடுபட்டுள்ள 6,507 மகளிர் குழுக்களுக்கு ரூ.17.27 கோடி சுழல்நிதி.







அடிப்படைத் தேவைகளை உருவாக்குவதில், பொதுமக்களும் பங்கேற்கும் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ், ரூ.48 கோடியில், 9,734 பணிகள்.


நகரங்களைப் போன்றே கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் உருவாக்கித் தரும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்' கீழ், ரூ.353 கோடியில், 53,561 பணிகள்.






கிராமப்புற ஊராட்சிகளின் செயல்பாட்டைக் கண்காணித்திடும் வகையிலும், திட்ட உருவாக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்றிடும் வகையிலும் கிராம சபைக் கூட்டங்கள்.


நீண்ட காலமாக நடத்தப்பெறாத உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்பு.




3 அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள்; ரூ.823 கோடி கூடுதல் மானியம்.




ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.744 புதிய வாகனங்கள்.




13,573 மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம்.





# வான்புகழ் வள்ளுவம்...

திருக்குறள் தமிழ்த்தேன்
செறிவறிந்த கிண்ணம்
அரும் வாயகன்ற
அறம் முப்பத்தெட்டும்
பொருளும் இணையவே
பொதுவில் எழுபதும்
இருபத்தைந்தென
இன்பமும் நிறைந்ததே



கைப்பிடி வள்ளுவம்
கருத்து விளக்கமே
தைப்பொங்கல் தரும்
தமிழ் விருந்தாகுமே
துய்த்தவர் அறிவெலாம்
தூய்மைய தாகவே
வைப்புநிதி இந்த
வையகம் வாழவே;

மழலையின் இன்பம்
மானின் மானம்
பழகிடும் அன்புடன்
பண்பும் அறிவும்
வழங்கிடும் மேன்மை
வாழ்க்கை வழியெலாம்
தழலினில் இட்டபொன்
தன்மைய தாகுமே;

வான்புகழ் வள்ளுவம்
வாழும் மனங்களால்
வான்வரை முட்டும்
வள்ளுவர் உருவம்
சான்றென அமைவது
தமிழ்க்கடல் அருகே
ஈன்றவள் அன்னை
இறுமாந்திடவே

– தா. பகவதி

# தமிழ்ப் பழமொழிகளில் அறிவியல்

நம் முன்னோர்கள் முதிர்ந்த அனுபவத்தின் அடிப்படையில் அறிந்துகொண்ட, ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அவசியமான பல நெறிமுறைகளைப் பின்வரும் வழித் தோன்றல்கள், தங்கள் மனதில் ஆழமாகப் பதிய வைத்துப் பின் அவ்வப்போது நினைவுபடுத்திக் கொள்வதற்கு ஏதுவாக, இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் பல கருத்துக்களைச் சொல்லிச் சென்றுள்ளார்கள். அவைகளை நாம் இன்றைக்குப் பழமொழிகள் என்றும் முதுமொழிகள் என்றும் போற்றி வருகின்றோம்.

இப்பழமொழிகளுக்கு உள்ள பல தனிச் சிறப்புகளில் ஒன்று, அவை, இடம், பொருள், காலம் இவற்றைப் பொருத்து மாறுபடுவதில்லை; உருக் குலையாமல் இன்றைக்கும் மக்களின் பயன்பாட்டில் நிலைத்திருக்கின்றன. இதற்குக் காரணம் பழமொழிகளின் அறிவியல் வாசனைதான். மூத்த மொழியான தமிழ்மொழியில் உள்ள பழமொழிகளுக்கு அறிவியல் பின்னணி உண்டு என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடலாம்.

''அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாகும்''

''ஆலும் வேலும் பல்லுக் குறுதி''

''இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்''

''ஈனரை அடுத்தால் மானம் அழியும்''

''உண்டி சுருங்குதல் பெண்டிற் கழகு''

''ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு''

''எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்''

''ஏற்ற முண்டானால் இறக்க முண்டு''

''ஐயப்பட்டால் பைய நட''

''ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?''

''ஓசை பெறும் வெண்கலம், ஓசை பெறாது மண்கலம்''

முன்னோர்களால் நம் மனதில் விளம்பரப்படுத்தப்பட்ட பயன்தரும் பழமொழிகளை அறிவியலின் ஆரம்பகாலச் சரித்திரம் என்று கூறுவதில் தவறில்லை தானே.

ஓரிரு சொற்களில் அறிவியல் உண்மைகளை அன்றைக்கே அள்ளித் தெளித்த தமிழ்ச் சான்றோர்கள், இவற்றையெல்லாம் உலகிற்கு உணர்த்த எப்போது அறிவியல் கற்றார்கள்? நம் முன்னோர்களுடைய ஆழமான அனுபவத்தின் பின்னணியில் இருந்த நுட்பமான ஆய்வு நோக்குத்தான் ஓர் அறிவியல் வாசனையை இப்பழமொழிகளுக்கு ஏற்படுத்தி இருக்கவேண்டும்.

நம் முன்னோர்கள், இயற்பியல், உயிரியல், உளவியல், வேளாண்மை, தொழில்நுட்பம், மருத்துவம், நலவாழ்வு போன்ற பல துறைகளில் அனுபவ அறிவு பெற்றிருந்தார்கள் என்பதற்கு அவர்களால் முன்மொழியப் பட்டு, இன்றைக்கு நம்மால் முன்மொழியப்படும் பழமொழிகளே சான்று. அறிவியலார் இன்றைக்கு ஆய்வுக் கூடத்தில் கண்டறிந்து கூறும் பல கருத்துக்களை அன்றைக்கே ஆக்கிய பழமொழிகளில் பொதித்து வைத்திருக்கின்றார்கள் என்பதை அறிய நேரிடும்போது நமக்குப் பெருமையாக இருக்கின்றது. தமிழ், இலக்கிய நயம் மிக்க மொழி மட்டுமல்ல, இக்கால அறிவியலுக்கும் எதிர்கால உயர் அறிவியலுக்கும் உகந்த மொழி என்பதை அன்றைக்கே சுட்டிக்காட்டிய சான்றோர்கள் வடித்த தமிழ்ப் பழமொழிகள் கூறும் பல்துறை அறிவியல் கருத்துக்களை இக் கட்டுரையில் காண்போம்.

## இயற்பியல்

அறிவியல் வாசனை ஊட்டப்பட்ட தமிழ்ப் பழமொழிகளுக்குச் சோதனை வாயிலான ஆதாரங்கள் ஏதுமில்லை; சான்றோர்களின் ஆழ்ந்த அனுபவங் களின் அழுத்தமான உச்சரிப்புகளே பழமொழியாக மாறி இருக்கின்றன. இயற்கை என்ற பேரறிவியலைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருப்பதால், அவைகளுக்கு இயல்பாகவே ஓர் அறிவியல் தன்மை ஊட்டப் பட்டிருக்கின்றது. இக்கருத்தை நாம் பல பழமொழிகளைக் கொண்டு நிறுவலாம்.

''குறைகுடம் தளும்பும், நிறை குடம் தளும்பாது'' அமைதியான நிறைகுடத்தை நல்லறிஞர்களுக்கும், ஆர்ப்பரிக்கும் குறைகுடத்தை அறியாமையால் தற்பெருமை பேசுபவர்களுக்கும் ஒப்பிட்டுக் கூறிய முறையில் ஒப்புமைக்கு மிகச் சரியானதைத் தேர்வு செய்தது தெரிகின்றது. இது தற்செயலானது என்று ஒதுக்கிவிட முடியாது. ஒப்புமைக்குச் சொல்லப்படும் பொருள் களின் தன்மைகளை முழுதுமாக அறிந்து கொள்ளாமல், ஒருவர், ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. இதனால் அதிர்வுகளுக்கு ஒத்ததிர்வும் குறைகுடம் மற்றும் அதிர்வுகளைத் தாக்குப் பிடிக்கும்

முனைவர் மெ.மெய்யப்பன்
மு. ஜெயராஜ்
முனைவர் இரா. பாலசுப்பிரமணியன்

நிறை குடம் பற்றிய அறிவியல் உண்மைகளை நம் முன்னோர்கள் அறிந்து வைத்திருந் தார்கள் என்பதில் ஐயமில்லை.

''மின்னாமல் இடி விழுமா?''

இடியும் மின்னலும், ஒரே நிகழ்வில், சமகாலத்தில் தோன்றி னாலும், பரவும் வேக வேறுபாட்டால், மின்னல்வரும் முன்னே, இடி வரும் பின்னே என்றானது. மின்னொளியின் உயர் வேகத்தையும், இடியொலியின் தாழ்ந்த வேகத்தையும் தெரியாமலா இப் பழமொழியைச் சொல்லி இருப்பார்கள்?

காலில் முள் தைத்த போது, ''முள்ளாலே முள்ளை எடுக்க வேண்டும்'' என்று யோசனை கூறும் பழமொழியின் தொன்மைக் கால அறிவியல் தானே இன்றைக்கும் பின்பற்றப்படுகின்றது.

''வைரத்தை வைரத்தால் வெட்டு''. வைரந்தான் எல்லாப் பொருட்களைக் காட்டிலும் கடினத்தன்மை கொண்டது. ஒரு பொருளை, அதைவிடக் கடினத்தன்மை மிகுந்த மற்றொரு பொருள்மீது கீறலை ஏற்படுத்தப் பயன்படுத்த முடியாது என்ற அறிவியல் உண்மை இதில் அடக்கம்.

மருந்தாகப் பயன்படுத்தப் பட்டவுடன் விஷத்தின் விலைகூட ஏறிவிட்டது. விஷம் இரத்தம் உறைவதைத் தூண்டுவதுடன், சில குறிப்பிட்ட நோய்களுக்கு அருமருந் தாகவும் பயன்படுகின்றது. இக் கருத்து தமிழ் மொழிக்கு ஒன்றும் புதிதல்ல.

''விஷத்தை முறிக்க விஷம்''

எதையும் இடம், காலமறிந்து செய்ய வேண்டும். தவறான இடத்திலும், தவறான காலத்திலும் தொடங்கப்படும் வேலைகள் முழுமை யான பலனைத் தருவதில்லை. காற்று வீசும் போது பஞ்சு விற்காதே, மழை பெய்யும் போது உப்பு விற்காதே என்பதை அறிவியலை அறியாத வர்களா சொல்லி இருக்க முடியும்?

''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்''

''அலை மோதும் போதே தலை முழுகு''

பொன்னே ஆனாலும் ஒலிக்காது என்றால் ஒலிக்காது தான். கீழே விழுந்து அதிரும் ஒலியின் வேறு பாட்டைக் கொண்டு பொற் கொல்லர்கள் தங்கத்தில் கலந் திருக்கும் வேற்றுப் பொருளின் அளவை மதிப்பிட்டறிவார்கள். பொற்கொல்லர்களின் அறிவியல் அறிவைப் புலப்படுத்துவது ஒரு பழமொழி.

''வெண்கலம் ஒலிக்கும், பொற் கலம் ஒலிக்காது''

ஒளி, அலையா இல்லை துகளா? இக் குழப்பம் இன்றைக்கும் உண்டு. உண்மையில் ஒளி, சூழ்நிலைக்கு ஏற்ப ஏதாவது ஒரு வேடத்தில் உலவுகின்றது. அலையை ஒரு துகளாக வெளிப்படுத்திக் காட்ட இயற்கை அனுமதித்திருக்கும்போது, அதே இயற்கை ஒரு துகளை அலையாக வெளிப்படுத்திக் காட்டவும் அனுமதிக்க வேண்டும். இதைத்தான் இயற்கையின் சமச் சீர்மை என்பர். ''இயற்கை எப்போதும் சமச் சீரானது'' இக் கருத்திலிருந்துதான் தற்கால விஞ்ஞானிகள் பொருள் அலை (Matter Wave)யைக் கற்பித்து, நுண்துகள்களின் இயக்கங்களைக் குவாண்டம் கொள்கை (Quantum Theory) மூலம் அறிந்து கொள்கின்றார்கள். இயற்கையின் சமச் சீர்மையைத் தெரிவிப்பது பல பழமொழிகள்.

''ஏற்ற முண்டானால் இறக்கமும் உண்டு''

''இன்பம் உண்டென்றால் துன்பமும் உண்டு''

''வண்டியில் ஓடம் ஏறும், வண்டியும் ஓடத்தில் ஏறும்''

**உயிரியல்**

''யானை கொழுத்தால் வாழைத் தண்டு, ஆண் பிள்ளை கொழுத்தால் கீரைத் தண்டு''

இப் பழமொழியிலிருந்து, யானை யின் மதத்தைப் போக்க வாழைத் தண்டைப் பயன்படுத்தியிருப்பது தெரிகின்றது. உணவில் கீரையின் முக்கியத்துவமும் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றது.

''பசியுள்ளவன் ருசியறியான்'' என்ற பழமொழி பசிக்கும் ருசிக்கும் உள்ள தொடர்பையும், ''தொண்டை வரை ருசி'' என்ற பழமொழி ருசியை அறியக் கூடிய சுவையுணர் காம்புகள் நுனி நாக்கிலிருந்து தொண்டை வரை உள்ளன என்பதையும், ''பசி வந்தால் பத்தும் பறந்து போம்'' என்ற பழமொழி பசிக்கும் உணர்வறி தன்மையில் ஏற்படுகின்ற தற்காலிய இழப்பிற்கும் உள்ள தொடர்பையும் புலப்படுத்திக் காட்டுகின்றன.

''அளவுக்கு மிஞ்சினால் அமு தமும் நஞ்சாகும்''

''கரும்பை விரும்ப விரும்ப வேம்பு''

''பருகப் பருகப் பாலும் புளிக்கும்''

இப்பழமொழிகள் உணவில் ஒன்று அதிகமானால் அது உடலுக்குக் கெடுதி என்பதைத் தெரிவிக்கின்றன. உண்ணா நோன்பு, உடல் உறுப்புகளுக்கு விடுமுறை ஓய்வு. சில சமயங்களில் உண்ணாமை கூட உடல் நலத்திற்கு நல்லது என்று ''இலங்கணம் பரம ஔடதம்'' என்ற பழமொழி தெரிவிக்கின்றது.

நம்மால் செய்யப்படும் ஒவ்வொரு செயலுக்கும், பேசப்படும் ஒவ்வொரு கருத்திற்கும், என்றைக்கோ நம் மனதைத் தீவிரமாகப் பாதித்துவிட்ட ஏதோ ஒரு நிகழ்ச்சி அல்லது சொற்கள் தான் அடிப்படைக் காரணங்களாக இருந்திருக்கின்றன. அந்த வகையில் ஒருவருடைய வாழ்க்கையின் பிற்பகுதி, முற்பகுதியோடு நெருக்க மான தொடர்புடையதாக இருக் கின்றது. இது பற்றி நம் முன்னோர்கள் தெள்ளத் தெளிவாகத் தெரிந்

உரிமைகளைக்
காத்திடுவோம்!
உறவுகளைப்
போற்றிடுவோம்!
உண்மைகளைப்
பேச வைப்போம் – தீய
உள்ளங்களைத்
தெளிய வைப்போம்!
– கலைஞர்

“இருள் விலகிப் பொழுது விடியுமா?
ஏழைக்கின்னும் உதவிட
முடியுமா?” என்று இந்தச்
சாதாரணன் சிந்திக்கிறான்.

பூதாகாரப் பேயிருள் விலகிவிட்டால்
தீதான தனியுடைமைப் பற்றற்றுச்
சீரான பொதுவுடைமைத்
தத்துவங்கள்
ஏராளும் மனிதர் வாழ்வில்
தாராளமாயெங்கும் தங்கிடுமே - எனச்
சாதாரணன் சிந்திக்கிறான்



வாழ்வெனும் பாதையை வளப்படுத்த
வன்முறையால் ஆகாதெனல் எம் கொள்கை

– கலைஞர்

திருந்தார்கள் என்பதற்கு அவர்கள் சொல்லிய பல தமிழ்ப் பழமொழிகளே சாட்சி.

“ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது”

“ஐந்தில் அறியாதவன், ஐம்பதில் அறிவானா?”

“இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை”

“இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்”

“தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை”

“புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?”

“மகனறிவு, தந்தை யறிவு”

“விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா?”

“இனம் இனத்தோட, வெள்ளாடு தன்னோட”

இவை தற்கால மரபியலின் முன்னோடி போலத் தோன்றுகின்றன.

ஈசலின் குறுகிய வாழ் நாளை “இறக்கும் காலம் வந்தால் பிறக்கும் ஈசலுக்குச் சிறகு” என்ற பழமொழி உணர்த்துகின்றது. இறப்பு என்பது பிறப்பின் தவிர்க்கமுடியாத முடிவு என்பதையும், அது பாகுபாடின்றி எல்லா உயிருக்கும் உண்டு என்பதையும்

“எல்லாத் திறத்தும் இறப்பு”

“ஆறிலும் சாவு நூறிலும் சாவு”

“இன்றிருப்பார் நாளை இல்லை”

“நீரில் எழுத்தாகும் யாக்கை”

போன்ற பழமொழிகள் முன்னறிவிக்கின்றன.

பல பழமொழிகளில் நம் முன்னோர்களுடைய அனுபவம் அறிவியலாக வெளிப் பட்டிருக் கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுடைய ஆழ்ந்த அனுபவங்களின் அழுத்தமான உச்சரிப்புகளே பழமொழியாக மாறி யிருக்கின்றன என்பது இக்கட்டு ரையின் முதல் பகுதி வெளிப்படுத்தி யிருக்கும் உண்மையாகும். அக்கருத்தை வேறு துறை சார்ந்த பழமொழிகளைக் கொண்டு மேலும் உறுதிப்படுத்தலாம்.

## நலவாழ்வு

“கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்” என்று சொல் வதிலிருந்து, கண்ணின் நலனுக்கு சூரிய ஒளியின் வெப்பக் கதிர்களின் பயன்பாடு பற்றியும்.

“சுத்தம் சோறு போடும்”

“கந்தை யானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி”

என்று சொல்வதிலிருந்து உடல் நலத்திற்குச் சுற்றுச் சூழலின் சுத்தம் பற்றியும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

“நோய்க்கு இடம் கொடேல்”

“வருமுன் காக்க”

இதில் உடல் ஆரோக்கியத்தின் அவசியம் வலியுறுத்திச் சொல்லப் பட்டிருக்கின்றது.

அதிக நாள் வாழ ஆசையா? அதற்கும் நல்ல எளிய யோசனையைக் கூறுகின்றது தமிழ்ப் பழமொழி.

“நொறுங்கத் தின்றால் நூறு வயது”

“நின்று தின்றால் குன்றும் மாளும்”

உணவைச் சீரணிக்கும் வழி முறையில் உமிழ்நீரின் முக்கியத் துவம் இதில் உணர்த்தப் பட்டிருக்கின்றது. உமிழ் நீரால் உணவு பக்குவப்பட்டால், இரைப்பை தன் பணியைச் செம்மையாகச் செய்து, பிற்பாடு உணவிலிருந்து முழு அளவில் சத்துக்களை உறிஞ்சி எடுப்பதற்குத் துணை செய்யும்; இல்லாவிட்டால் சத்துக்களும் கழிவாக வெளியேறிவிடும். இக்கருத்துகளைத் தெரிந்திருந்த தினால் தான் அப்படிப் பழமொழிகளை ஆக்க முடிந்ததோ?

“ஆலும் வேலும் பல்லுக்குறுதி”

என்பதில் பற்களின் பாதுகாப்பு மீது காட்டும் அக்கறை தெரிகின்றது. ஆலங்குச்சி, வேப்பங்குச்சிகளின் மரச்சாறு வாயில் உள்ள பாக்டீரியாக் கிருமிகளை அழித்து விடுகின்றது என்பதை அறிந்து கொண்டதின் வெளிப்பாடு தான் இப்பழமொழி.

நலவாழ்வுக்கு நல்ல குடிநீர் அவசியம் என்பதைப் பல பழமொழிகள் தெரிவிக்கின்றன.

''நீரகம் பொருந்திய ஊரகத்து இரு''

''நீரின்றி அமையாது உலகு''

பாலை ஓர் ஔடதமாய் வர்ணிக்கின்றது ஒரு பழமொழி.

''பாலுமாம் மருந்துமாம்''

தனித் தனியான இரு செயல்கள் ஒத்து நிகழ்ந்தால் அதை ஒத்ததிர்வு (resonance) என்கிறோம். மனிதர்கள் கருத்தொருமித்து இணைந்து வாழ்வதும் இதைப் போன்றதே. ஒத்ததிர்வு நிகழ்வுகள் வலிமையுடன் செய்யப்படுவதைப் போல ஒற்றுமையும், ஒழுக்கமும் சேர்ந்த வாழ்க்கையே வலிமை உடையதாயிருக்கின்றது. இன்றைக்கு உருவாகும் சமத்துவபுரங்கள் இக்கருத்தை நிலைநாட்ட முயலுகின்றன.

''ஒற்றுமையே உயர்வு தரும்''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இல்லையேல் அனைவருக்கும் தாழ்வு''

''ஊரோடு ஒத்து வாழ்''

போன்ற பழமொழிகள் சமத்துவ புரங்களின் மூலங்கள்.

**உளவியல்**

''குற்றமுள்ள மனது குறு குறுக்கும்''

''அகத்தின் அழகு முகத்திலே''

போன்ற பழமொழிகள், மனதின் மௌன மொழிகளைக் கொண்டு ஒரு மனிதனுள் ஒளிந்திருக்கும் உண்மையான மனிதனை அறியும் உளவியல் வழிமுறையைப் பற்றி தெளிவாகக் கூறுகின்றன. தற்காலக் கண்டுபிடிப்பான பொய்யறி கருவி (Lie detector)க்கு இப் பழமொழியே அடிப்படை.

செய்யும் செயல் எதுவானாலும் எடுத்துக் கொள்ளும் முயற்சி ஒன்றுதான் நிச்சயமான வெற்றிக்கு வழி என்பதை எல்லோரும் அறிந்திருந்தாலும், வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் வெகு சிலரே. மக்களின் இம் மனப்போக்கை முன்பே அறிந்திருந்ததினால், முயற்சியை வலியுறுத்தி அடுக் கடுக்காக பல பழமொழிகளைச் சொல்லி இருக்கின்றார்கள்.

''முயற்சி திருவினையாக்கும்''

''விடா முயற்சி வெற்றிக்கு வழி''

''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்''

''முனிவில்லார் முன்னியது எய்தாமை இல்''

''முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?''

முயற்சித்தாரைப் போற்றும் பழமொழிகள், முயற்சி இன்றி சோம்பித் திரிவாரை இகழத் தவறவில்லை.

''வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இல்''

''பெரிது உக்கு ஓடிக் காட்டி விடும்''

ஆசைகள், அறிவை மழுங்கச் செய்துவிடும். அதனால் செயலைச் செம்மையாக நிறைவேற்றி முடிக்க முடியாத நிலை நிச்சயமாக உருவாகும். இதை முன் தெரிவிப்பது

''பேராசை பெரு நட்டம்''

என்ற பழமொழி. அச்சமும் இப்படிப்பட்டதுதான். செயலைத் தொடங்கவே துணிவைத் தராது.

''அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்''

''அஞ்சினவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்''

''உயிருள்ள மட்டும் தைரியம் விடலாமா?''

''துணிந்தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால் ஆழம்''

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்''

''அஞ்சியவனைக் குஞ்சும் விரட்டும்''

தவிர்க்க வேண்டிய அச்சத்தைப் பற்றிக் கூறும் பழமொழிகளின்

**சொந்தக் காரியம், பொதுக்காரியம் ஆகிய எல்லாவற்றையும் நியாயமாகவும், சாமார்த்தியமாகவும், பெருந்தன்மையாகவும் செய்யக் கற்றுக் கொடுப்பதே முழுமையான கல்வியாகும்.**

**— ஜான் மில்டன்**

**அறிவு என்பதற்கும், நூலறிவு அல்லது கல்வி என்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு. அறிவு என்பது, உண்மை மெய்மைகளை மாத்திரமே ஆதாரமாய்க் கொண்டது. நூலறிவு அல்லது கல்வி என்பது உண்மை, மெய்மை, பொய்மை, மடமை முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டது.**

**— பாரதிதாசன்**

பட்டியல் இது.

உடனில்லா விட்டாலும் பின்னொரு நாள் கேடு செய்தவர்கள் கெட்டுப் போவார்கள் என்பதை உறுதிபடத் தெரிவிப்பது பல பழமொழிகள்.

''தன் வினை தன்னைச் சுடும்''

''கெடுவான் கேடு நினைப்பான்''

''செய்த தீவினை செய்பவர்க்கே''

''வினை விதைத்தவன் வினை யறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்''

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்''

தீயதைக் கொடுத்தால் தீயதைத் தான் பெற முடியும், நல்லதைச் செய்தால் நல்லதைப் பெறலாம். இதை உணர்த்துவது

''இட்டார்க்கு இட்ட பலன்''

''இகழ்வான் இகழப்படுவான்''

– போன்ற பழமொழிகள். ஒரு செயலைத் தொடங்கிய பின்னர்தான், அதன் விரிவாக்கம் என்பது புலப்படும் என்பதைத் தெரிவிப்பது

''பண்ணப் பண்ணப் பலவிதம் ஆகும்''

என்ற பழமொழியும், பதறினால் காரியம் சிதறும் என்பதை

''பதறாத காரியம் சிதறாது''

என்ற பழமொழியும், நாவடக்கம் நம்மை உயர்த்தும் என்பதை

''மௌனம் மலையைச் சாதிக்கும்''

என்ற பழமொழியும் தெரிவிக் கின்றன.

## வேளாண்மை

உழவுத் தொழிலின் சிறப்பு ணர்த்தும் தமிழ்ப் பழமொழிகள் பல உள்ளன.

''அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிரு''

''உழவின் மிகுந்த ஊதியம் இல்லை''

''உயிர்த் தொழில் எல்லாம் பயிர்த் தொழில் தன்னால்''

''ஏர் நடந்தால் போர் நடக்கும்''

''வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை''

– போன்ற பழமொழிகளைக் குறிப்பிடலாம். இத்தகைய சிறப்புற்ற உழவியலை வர்ணிக்கும் பழமொழிகளில் அறிவியலும் பின்னிக் கலந்துள்ளன.

உழவியலில் ஆழ உழுதல், அகல உழுதல், அதிர உழுதல், மேலாக உழுதல் எனப் பல வகையான உழு முறைகள் பண்டைத் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதில் எந்தவகையான உழவு முறை சாலச் சிறந்தது என்பதைத் தெரிவிப்பது

''அகல உழுவதைவிட ஆழ உழு''

''ஆழ உழுது தேடி எடு''

''ஆழ உழுது அடர விதை''

''அதிர அடித்தால் உதிர விளையும்''

''ஆழ உழுதாலும் அடுக்க உழு''

போன்ற பழமொழிகள்.

எரு இடுதலை விட உழவு செய்தல் இன்றியமையாதது என்பதை

''எருவினும் வலியது உழவே'' என்ற பழமொழியும், அதிக மகசூலின் இரகசியத்தை

''வெண்ணெய் போல உழவு, குன்று போல விளைவு'' என்ற பழமொழியும் தெரிவிக்கின்றன.

சாகுபடிக்குரிய நிலத்தைத் தேர்வு செய்வதில் தமிழக உழவர்கள் நுட்பமான அறிவைப் பெற்றிருந்தார்கள் என்பதற்குக் கீழ்வரும் பழமொழிகள் சாட்சி கூறுகின்றன.

''ஆற்றை அடுத்த நிலமும், அரசனை அடுத்த குடியும் முன்னுக்கு வராது''

''ஊர் ஓரத்தில் கொல்லை, உழுதவனுக்குப் பயிர் இல்லை''

''மேனு மினிக்கியைக் கொண்டவனும் கெட்டான், மேட்டிலே பயிரிட்டவனும் கெட்டான்''

''வெள்ளமேயானாலும் பள்ளமே பயிரிட வேண்டும்''

''வெள்ளம் போனாலும் பள்ளந்தான் விளையும்''

''மதகடி நன்செய்யும், மலையடி புன் செய்யும்''

''மரம் இருந்தால் மழை இருக்கும்''

என்ற பழமொழி பொய்க்காத மழைக்குத் தேவை அடர்ந்த வனங்களே என்பதைத் தெரிவிக்கின்றது.

காய்கறிப் பயிர் பற்றி நம் முன்னோர்கள் நமக்கு அறிவுரையாகக் கூறிய பழமொழிகள் பின்வருமாறு.

''அவரை எம்மாதம் போட்டாலும் தை மாதம் காய்க்கும்''

''ஆவும் தென்னையும் ஐந்தாண்டில் பலனீயும்''

''ஆமணக்கும், பருத்தியும் அடர விதைத்தால் ஆகாது''

''ஆவணிக் காரில் பூசணிப் பூ''

''எட்டடி வாழை, பத்தடி பனை, பதினாறடி தென்னை''

''காய்கறி பறிக்க கத்தரி நாடு''


''பெண் வளர்த்திப் பீர்க்கங் கொடி''

''முருங்கையை ஒடித்து வளர்க்க வேணும்''

அனுபவத்தின் அடிப்படையிலான அணுகுமுறைகளே தமிழ்ப் பழமொழிகளில் மிகுந்துள்ளன என்றாலும் அறிவியலுக்கு அப்பாற்பட்டவைகளாக எந்தவொரு பழமொழியும் ஆக்கப்படவில்லை. அதுவே நம் முன்னோர்களுடைய அறிவியல் திறத்திற்கு முத்திரைச் சான்று. ★

லியோ டால்ஸ்டாயின் இரு கதைகள்:

# உழைப்பே உயர்வு



**லியோ டால்ஸ்டாய்**

கிராமத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அருகிலுள்ள பாறையிலிருந்து முட்டைபோல் உருண்டையான பொருளைக் கண்டு எடுத்தனர். தானிய மணியைப்போல் அதில் மத்தியில் ஒரு கோடும் இருந்தது. அவ்வழியே போய் கொண்டிருந்த நகரவாசி ஒருவன் அதைப் பார்த்து, சிறுவர்களிடம் ஒரு காசைக் கொடுத்துவிட்டு அதை வாங்கிக் கொண்டான். நேராக அரண்மனைக்குச் சென்று ஜார் அரசனிடம் கொடுத்தான். அவனுக்குச் சிறிது பணம் கிடைத்தது.

அரசன், அரசாங்க நிபுணர்களை அழைத்து அந்தப் பொருளைக் கொடுத்து அது தானியமா அல்லது முட்டையா என்பதை ஆராய்ந்து தெரிவிக்குமாறு கட்டளையிட்டான்.

நிபுணர்கள் ஆராய்ந்து பார்த்தார்கள். அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. அதை ஒரு ஜன்னல் அருகில் போட்டு வைத்தனர். கோழி ஒன்று வந்து அதைக் கொத்தியது. அதில் ஒரு துவாரம் விழுந்தது. அதன்பின் அது தானியமணியே என்று உறுதியாயிற்று. அரசனிடம் தெரிவித்தார்கள்.

அரசன் அதைக் கேட்டு வியப்படைந்தான்.

இத்தகைய தானியம் எங்கே, எப்பொழுது விளைந்தது



என்பதைக் கண்டறிந்து கூறும்படி நிபுணர்களுக்குக் கட்டளையிட்டான்.

நிபுணர்கள் மீண்டும் ஆலோசித்தார்கள். புத்தகங்களையெல்லாம் புரட்டினார்கள். ஒன்றும் தெரியவில்லை. அரசனிடம் சென்று தங்களால் கண்டுபிடிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்தனர்.

ஒருவேளை விவசாயிக்குத் தெரியக்கூடும் என ஆலோசனை கூறினார்கள். அரசனின் கட்டளைப்படி வயதான விவசாயி ஒருவனைக் கூட்டி வந்தனர். அவனோ பற்கள் விழுந்த தள்ளாத வயதோடு தடியை ஊன்றிக் கொண்டு வந்தான். அவனிடம் தானிய மணியைக் காண்பித்து "பெரியவரே, இத்தகைய தானியம் எங்கே விளைந்தது? நீர் பயிர் செய்தது உண்டா?" என்று கேட்டான் அரசன். "இதைப் போன்றதைப் பார்த்ததும் இல்லை; பயிர் செய்ததும் இல்லை. என் தந்தையைக் கேட்டால், அவருக்குத் தெரிந்தாலும் தெரியும்" என்று கூறினான் கிழவன்.

விவசாயினுடைய தகப்பனைக் கூட்டி வந்தனர். அவன் கையில் தடியுடன் வந்தான். பார்வை சரியாக இருந்தது அவனுக்கு. அவனிடம் அதைக் காண்பித்து, முன் போலவே கேட்டான் அரசன். இவனுக்குக் காது சிறிது மந்தம். ஆயினும் பார்வை நன்றாக இருந்ததால் அதை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்து விட்டு, என் காலத்தில் பயிரிட்டதும் இல்லை. வாங்கியதும் இல்லை. மேலும், என் காலத்தில் பணம் புழக்கத்தில் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானதைத் தாங்களே பயிர் செய்து கொண்டார்கள். தங்களிடம் இல்லாததைப் பண்டமாற்றுச் செய்துகொண்டார்கள். இது எங்கே விளைந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இப்போது இருக்கும் தானியங்களைக் காட்டிலும் சற்று பெரிதாகத்தான் இருக்கிறது. என்றாலும் இவ்வளவு பெரிதான தானியத்தை நான் பார்த்ததே இல்லை. என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். அவரைத் கேட்டால் தெரியும்" என்றான்.

அவனுடைய தகப்பனைக் கூட்டிவரச் செய்து ஆள் அனுப்பினான் அரசன். அவனோ கையில் தடி இல்லாமல், தள்ளாடாமல் நன்றாக நடந்து வந்தான், பார்வையும் தெளிவாக இருந்தது. காது நன்றாகக் கேட்டது. பேச்சில் தடுமாற்றம் இல்லை. அவனிடம் தானியத்தைக் காண்பித்து முன்போலவே அரசன் கேட்டான்.

அவன் அதை உற்றுப் பார்த்துவிட்டு, "இதைப் போன்ற தானியத்தைப் பார்த்து வெகு நாட்கள் ஆகின்றன" என்றான் கிழவன்.

அப்படியானால், "எங்கே பயிர் செய்யப்பட்டது? நீயே பயிர் செய்திருக்கிறாயா? அல்லது யாரிடமிருந்தாவது வாங்கியிருக்கிறாயா? என அடுக்கடுக்காகக் கேள்விமேல் கேள்வி கேட்டான் அரசன்.

"இதைப் போன்ற தானியம் என் காலத்தில் எல்லா இடங்களிலுமே விளைந்தது. நானும் பயிர் செய்திருக்கிறேன்" என்றான் அவன்.

மேலும் சில கேள்விகளைக் கேட்டான் அரசன்.

கிழவனுக்குச் சிரிப்பு வந்தது. அதைச் சற்று அடக்கிக்கொண்டு "தானியங்களை விற்பதும் இல்லை; வாங்குவதும் இல்லை. அவ்வளவு பெரிய பாவத்தைச் செய்வது பற்றி என் காலத்தில் யாரும் எண்ணிக்கூட பார்த்திருக்க மாட்டார்கள். ஒவ்வொருவனுக்கும் தேவையான தானியம் இருந்தது" என்று கூறினான்.

"எங்கே பயிரிட்டாய்? உன் நிலம் எங்கே உள்ளது?" என்று கேட்டான் அரசன்.

"ஆண்டவன் படைத்த பூமியே என் நிலம்; நான் உழுத இடம் எல்லாம் என்னுடைய நிலமே! நிலம் எல்லோருக்கும் உரிமையாயிருந்தது. தன்னுடையது

என்று யாருமே சொந்தம் கொண்டாடுவதில்லை. தன்னுடையது என்று ஒருவன் சொல்லிக் கொள்ளக் கூடியது அவனுடைய உழைப்பு மட்டுமே ஆகும்" என்றான் கிழவன்.

மேலும் இரண்டு கேள்விகளுக்குப் பதில் கூறுமாறு அவனைக் கேட்டான் அரசன். அதாவது

"இத்தகைய தானியம் முன்பு விளைந்தது ஏன்? இப்பொழுது அவ்வாறு விளையாதது ஏன்?

உன் மகனும் பேரனும் தள்ளாடி, தடி ஊன்றி நடக்கும் போது நீ மட்டும் நிமிர்ந்து நடந்து, பற்கள் விழாமல், பார்வைத் தெளிவோடு, குரல் தடுமாறாமல் இருப்பது எப்படி?".


– இவை இரண்டும் அரசன் கேட்ட கேள்விகள்!

"இரண்டு கேள்விகளுக்கும் காரணம் இதுவே" என நிதானமாகப் பதில் கூறத் தொடங்கினான் கிழவன்.

"தங்களுடைய உழைப்பினால் மட்டுமே மனிதர்கள் வாழ்வதைக் கைவிட்டார்கள்; மற்றவர்கள் பொருள் மீது ஆசைவைக்க முற்பட்டு விட்டார்கள். முன்காலத்தில் அப்படி இல்லை. அப்பொழுது ஆண்டவன் விதித்தபடி வாழ்ந்து வந்தனர். மேலும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே முதலாளிகளாக இருந்தனர். பிறர் பொருளைக் கவர்வதில்லை, அதுவே காரணம்!".

அரசனுடைய சிந்தனை சுழன்றது!

★ ★ ★



# குடிகாரன்



## இரஷ்யா

ஒரு விவசாயி. அவன் மிகவும் ஏழை. உழுவதற்காக அவன் வயலுக்குச் சென்றான். காலையில் எதுவும் சாப்பிடவில்லை. பகல் உணவுக்காக ஒரு துண்டு ரொட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு சென்றான்.


சட்டையைக் கழற்றி ரொட்டியை அதில் வைத்துச் சுருட்டி, ஒரு மரத்தின் அடியில் வைத்து விட்டு உழத் தொடங்கினான்.


பகல் நேரம் வந்தது. அவனுக்குப் பசி எடுத்தது. குதிரையை அவிழ்த்து மேய விட்டுவிட்டு மரத்தடிக்குச் சென்று சட்டையைப் பிரித்தான்; ரொட்டியைக் காணவில்லை. தேடிப் பார்த்தான்; கிடைக்கவில்லை. இந்தப்பக்கம் யாருமே வரவில்லையே? ரொட்டியை யார் எடுத்திருக்க முடியும்? என வியப்படைந்தான்.

குட்டிப் பிசாசு ஒன்று அவனுடைய ரொட்டியை எடுத்துக் கொண்டு, அதைப் பறிகொடுத்த விவசாயி சபிப்பதைக் கேட்பதற்காகப் புதரில் மறைந்திருந்தது.

ரொட்டியை இழந்த போதிலும் விவசாயிக்கு வருத்தம் இல்லை; யாரையும் சபிக்கவும் இல்லை "பசியினால் செத்துப் போகப் போவதில்லை. பசித்தவன் எவனோ எடுத்திருக்கிறான், அவனாவது மகிழ்ச்சியோடு சாப்பிட்டு விட்டுப் பசி தீரட்டும்" என்று கருதி, பக்கத்திலிருந்த கிணற்றுக்குச் சென்று வயிறு நிறைய தண்ணீரை மொண்டு குடித்து விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டான். பிறகு குதிரையைப் பூட்டி உழுதான்.

குட்டிப் பிசாசுக்கு வருத்தம். ரொட்டியை இழந்த விவசாயியைப் பாவச்செயல் செய்யும்படித் தூண்ட இயலவில்லையே என





குட்டிப் பிசாசு பயந்து மீண்டும் பூமிக்கு வந்து என்ன செய்வது எனச் சிந்தித்தது. வழிப் போக்கனைப் போல் உருவம் எடுத்து விவசாயியிடம் சென்று வேலைக்கு அமர்ந்தது.

அந்த ஆண்டு விதைப் பருவத்தில் சதுப்புநிலத்தில் விதைக்குமாறு குட்டிப் பிசாசு ஆலோசனை கூறியது. விவசாயியும் அப்படியே செய்தான். அந்த ஆண்டு மழை இல்லாததால் எல்லோருடைய பயிர்களும் கருகிச் சாவியாகி விட்டன. ஆனால் விவசாயி மட்டும் சதுப்பு நிலத்தில் பயிர் செய்ததால், கதிர் நன்றாக வளர்ந்து நல்ல பலனை அளித்தது.

மேட்டுப் பகுதியில் பயிர் செய்யுமாறு அடுத்த ஆண்டு யோசனை கூறியது குட்டிப் பிசாசு. விவசாயியும் அப்படியே செய்தான். பெருமழை காரணமாக, அப்பொழுது மற்றவர்

எண்ணி பெரிய பிசாசிடம் சென்று விவரத்தைக் கூறியது. அதற்கு ஒரே குழப்பம்.

"விவசாயி உன்னை வென்று விட்டான் என்றால் அது உன்னுடைய முட்டாள்தனமாகத்தான் இருக்க வேண்டும். விவசாயிகளிடம் எல்லாம் இத்தகைய நல்ல குணங்கள் வளர்ந்து விட்டால் பிறகு நம்மால் வாழவே முடியாது. இதை இப்படி அலட்சியமாக விட்டுவிடக்கூடாது. திரும்பவும் அவனிடம் போய் அவனை உன் வசப்படுத்து. மூன்று ஆண்டுகள் தவணை தருகிறேன். அவனை உன்னால் வசப்படுத்த முடியாவிட்டால் உனக்குத் தண்டனை அளிப்பேன்" என்று கடிந்து கூறியது பெரிய பிசாசு.

களுடைய பயிர்கள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் சென்றன, ஆனால் விவசாயிக்கு மட்டும் நல்ல விளைச்சல்!

தானியம் ஏராளமாகச் சேர்ந்தது விவசாயிடம். அதை என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை. தானியத்திலிருந்து நல்ல மது தயாரிக்கலாம் என வழிப்போக்கன் உருவிலிருந்த குட்டிப் பிசாசு யோசனை கூறியது. விவசாயியும் அப்படியே சாராயம் காய்ச்சினான். முதலில் தானே குடித்தான். பிறகு நண்பர்களுக்கும் கொடுத்தான்.

குட்டிப் பிசாசு மிக வேகமாகச் சென்று பெரிய பிசாசை கூட்டிக் கொண்டு வந்தது.

பணக்கார விவசாயிகள் சிலரை மது அருந்துவதற்குத் தன் வீட்டிற்கு அழைத்தான். வந்தவர்களுக்கு எல்லாம் அவன் மனைவி மது வழங்கினாள். அப்பொழுது அவள் மேஜையில் இடித்துக் கொண்டதால் மது கொஞ்சம் கீழே சிந்தியது. விவசாயி மனைவியைக் கண்டபடி திட்டி கோபத்துடன் காணப்பட்டான்.

"விவசாயியை எப்படி மாற்றிவிட்டேன் பார்த்தாயா?" என்று பெரிய பிசாசிடம் குட்டிப் பிசாசு கூறியது.

பிறகு, விவசாயி, விருந்தினர்களுக்குத் தானே மது வழங்கினான். அப்பொழுது ஏழை விவசாயி ஒருவன் தனக்கும் மது கிடைக்கும் என ஆவலோடு வந்தான். ஆனால், அவனுக்குக் கிடைக்கவில்லை. அவனைக் கவனிப்பார் யாருமே இல்லை.

பெரிய பிசாசு விவசாயியின் நடவடிக்கையைக் கண்டு திருப்தியடைந்து புறப்பட்டது. "கொஞ்சம் பொறு. இன்னும் வேடிக்கை பார்க்கலாம்" என்று கூறியது குட்டிப் பிசாசு.

மது அருந்தியவர்கள் வாய் குழறி ஏதேதோ பேச முற்பட்டார்கள். ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டார்கள்.

"முதல் கோப்பையிலே அவர்களுக்கு நரிக்குணம் வந்து விட்டது என்று கூறினால் விரைவிலேயே அவர்களுக்குள் ஏமாற்றத் தொடங்கி விடுவார்கள். பிறகு நமக்கு அதிக வேலை இருக்கும்" என்று கூறியது பெரிய பிசாசு.

அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதையும் கவனிக்கும்படி குட்டிப் பிசாசு கூறியது. மேலும் நரியைப் போல இருப்பவர்கள் ஓநாயைப் போல உறுமுவார்கள் என்றது.

மறுமுறை மற்றொரு கோப்பை மது அருந்தினார்கள். அவர்கள் பேச்சுக்கள் முன்னைக் காட்டிலும் மோசமாகவும் சத்தமாகவும் இருந்தது. புகழ்ந்து பேசிக் கொண்டவர்கள் இப்பொழுது ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டார்கள்; மிரட்ட முற்பட்டனர்.

பெரிய பிசாசு இதைப் பார்த்துவிட்டு, சந்தோஷ மிகுதியால் "அருமையான வேலை செய்துள்ளாய்" என குட்டிப் பிசாசைப் புகழ்ந்தது. "மூன்றாவது கோப்பையையும் குடிக்க விட்டுப் பார், பன்றியைப் போல உறுமுவார்கள்" என்று கூறியது குட்டிப் பிசாசு.

மூன்றாவது கோப்பை மதுவை எல்லோரும் குடித்தனர். போதை தலைக்கு ஏறிவிட்டது. தாறுமாறாக என்னவோ உளறிக்கொண்டு இருவர், மூவர் குழுவாக வெளியேறினார்கள். சிலர் தெருவில் விழுந்து உருண்டனர். அவர்களை வழியனுப்ப வந்த விவசாயி சாக்கடையில் விழுந்தான். எழுந்திருக்க இயலாமல் பன்றியைப் போல் உறுமிக் கொண்டு கிடந்தான்.

பெரிய பிசாசுக்கு அளவற்ற மகிழ்ச்சி. "இந்த மதுவை எப்படித் தயாரித்தாய்? நரி, ஓநாய், பன்றி ஆகியவற்றின் இரத்தத்தைக் கலந்து தயாரித்தாயா?" என்று குட்டிப் பிசாசைக் கேட்டது.

"இரத்தம் எதையும் உபயோகிக்க வில்லை. விவசாயிக்குத் தானியத்தை நிறைய விளையும் படி ஏற்பாடு செய்தேன். அவ்வளவுதான். கொடிய விலங்குகளின் குணம் அவனுடைய இரத்தத்தில் முன்பே இருந்தது. அவனுடைய தேவைக்குப் போதுமான அளவு பயிர் செய்த போது அந்தக் குணங்கள் வெளிப்படத் தெரிய வாய்ப்பில்லாமல் இருந்தது. பசிநேரத்தில் அவனிடத்தில் இருந்த ஒரு ஒரே ரொட்டி காணாமல் போனதற்கு அவன் வருந்தாமல் இருந்த காலமும் உண்டு. பிறகு தேவைக்கு மேல் தானியம் சேர்ந்ததும் அவன் போக்கே மாறிவிட்டது. அவனுக்குக் குடிக்கக் கற்றுக் கொடுத்தேன். கடவுளின் அருள் பிரசாதமான தானியத்தை மதுவாக மாற்றியதுமே அவனிடம் நரி, ஓநாய், பன்றி ஆகியவற்றின் குணங்கள் உண்டாகத் தொடங் கின. மதுவைக் குடித்தவன் எப்போதும் மிருகமாகவே இருப்பான்'' என்று கூறியது குட்டிப் பிசாசு. பெரிய பிசாசு அதைப் புகழ்ந்து பாராட்டியது.

***நன்றி : உலகப் புகழ்பெற்ற***
***நீதிக்கதைகள்– லியோ டால்ஸ்டாய்***
***வெளியீடு : திருமகள் நிலையம், சென்னை–17.***

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை :**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாலையூர் ஊராட்சியில் 12 குக்கிராமங்கள் அடங்கி உள்ளது. மேற்படி கிராமங்கள் மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளன. அதாவது சாலை வசதி, மின்சார வசதி, பேருந்து வசதி, குடிநீர் வசதி எதுவும் சரிவர செய்யப்படவில்லை. குறிப்பாக குடிநீர் வசதி என்பது இதுநாள் வரை தீர்க்கப்படவில்லை. காரணம் மேற்படி கிராமங்களில் ஒரு மேல்நிலை தொட்டி கூட அமைத்து குடிநீர் பிரச்சினையை தீர்க்க இதுநாள் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதுகுறித்து உள்ளாட்சி தேர்தல் முடிந்ததும் முதலமைச்சர் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதும் உடனடியாக 5 இடங்களில் மட்டும் ஆழ்க்குழாய் கிணறு போடப்பட்டது. ஆனால் இதுநாள் வரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுகுறித்து குடிநீர் வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றும் அதிகாரிகள் இன்று வரை 'மெத்தனப்போக்கை' கடைபிடித்து வருகிறார்கள்.

எனவே இனியும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக குடிநீர் கிணறுகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

*தலைவர், ஊராட்சி மன்றம்,*
*பாலையூர், புதுக்கோட்டை.*

**தீர்வு :**

**புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், பாலையூர் ஊராட்சியின் 12 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்யும் பொருட்டு 1998–99ஆம் ஆண்டு 5 நீர் ஆதாரம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1999–2000) பாலையூர் ஊராட்சியில் அடங்கிய 12 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி வழங்க திட்டங்கள் எடுத்து செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.**

*– நிர்வாகப் பொறியாளர்,*
*தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்*
*கிராமக் குடிநீர்த்திட்டக் கோட்டம்,*
*புதுக்கோட்டை – 622 001.*

★ ★ ★

**பிரச்சினை :**

திருச்சி மாவட்டம், முசிறி அருகே அமைந்துள்ளது தொட்டியம் வட்டமாகும். தொட்டியம் நகரத்தின் வழியாக சேலம் நெடுஞ்சாலை செல்கிறது. இச்சாலையின் இருமருங்கிலும் மணல் நிரம்பியுள்ளது. மிதிவண்டி, இரு சக்கர வாகனங்கள் ஆகியவற்றில் செல்பவர்கள் எதிர்வரும் வாகனங்களுக்கு வழிவிட்டு ஒதுங்கும்போது, மணல் குவியலில் சக்கரங்கள் சிக்கி, புதைந்து வண்டிகளில் செல்வோர் தடுமாறி கீழே விழுந்து விடுகின்றனர். ஏராளமான விபத்துக்கள் நடக்கின்றன. இதனால் சிலர் உயிரிழந்துள்ளனர். வண்டிகளில் சுமை கொண்டு செல்வோர், அகவையானவர்கள், பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பல நாளிதழ்களிலும் இச்செய்தி வந்துள்ளது.

எனவே, தமிழரசு இச்செய்தியினை வெளியிட்டு நன்மை கிடைக்கச் செய்ய பணிவுடன் வேண்டுகிறேன்.

*இப்படிக்கு*
*பொதுமக்கள் சார்பாக ஆ.தமிழ்துரைசாமி*
*பாலசமுத்திரம் – 621 203*
*தொட்டியம் வட்டம், திருச்சி.*

**தீர்வு :**

**தொட்டியம் நகரம், திருச்சி நாமக்கல் மாநில அரசு சாலையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் சாலையின் இருபுறமும் நிரம்பியிருந்த மணல் முழுமையாக அகற்றப்பட்டு போக்குவரத்திற்கு எவ்வித இடையூறுமின்றி செல்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

கே. மருதபெருமாள்,
கோட்டப் பொறியாளர் (நெ.ஊ.ப), திருச்சி–20

★ ★ ★

**பிரச்சினை :**

சேலம் மாவட்டம் ஓமலூர் தாலுக்கா செல்லப்பிள்ளை குட்டை அரிசன காலனிக்கு பட்டா வழங்கப்பட்டது. 2 வருடம் ஆகியும் இன்னும் யாருக்கு எந்த இடம் என்று காட்டவில்லை. ஆகையால் எங்களுக்கு தமிழரசு பத்திரிகை மூலமாக வீட்டு மனை இடம் கிடைக்க உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இப்படிக்கு*

*ஊர்பொது மக்களுக்காக,*
*த.காவேரி, செல்லப்பிள்ளைக்குட்டை,*
*அரிசன காலனி, சேலம்.*

**தீர்வு :**

**சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செல்லப்பிள்ளைக் குட்டை கிராமம், (மல்லக்கவுண்டனூரில்) ச.நெ.104/7இல், 1996ஆம் ஆண்டு 43 ஆதிதிராவிட பயனாளிகளுக்கு ஓமலூர் ஆதிதிராவிடநல தனி வட்டாட்சியரால் இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டது. ஓமலூர் ஆதிதிராவிட நல தனி வட்டாட்சியர் ஆய்வாளரால் முட்டுக்கல் நடப்பட்டு அத்து காண்பிக்கப்பட்டது. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட 43 இனங்களில் தற்போது 7 இலவச குரூப் வீடுகள் கட்ட பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் பட்டா வழங்கிய பொது இடத்தினில் சக்தி மாரியம்மன் கோவிலும் கட்டப்பட்டுள்ளது.**

*மாவட்ட வருவாய் அலுவலர்,*
*சேலம் மாவட்டம்.*

★ ★ ★

# கலைஞரின் உழவர் சந்தை




**மா**ண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்களால் **14–11–1999** அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்ட உழவர் சந்தைத் திட்டம் அனைத்துத் தரப்பினரிடத்தும் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. அறிமுகப்படுத்தப் பட்ட சில நாட்களுக்குள்ளேயே ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றுவரும் அருமையான திட்டமாக இது திகழ்கிறது.

**தோட்டத்திலிருந்து சமையலறைக்கு**

நுகர்வோரைப் பொறுத்தவரையில், இது ஒரு மனநிறைவைத் தருகிற திட்டமாகத் திகழ்கிறது. உழவர் சந்தை அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையிலுள்ள அண்ணாநகர், கலைஞர்நகர், மட்டுமல்லாமல் நகரத்தின் தொலைதூரத்திலிருந்தும் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக உழவர் சந்தைக்குக் காய்கறிகள் வாங்க வருகிறார்கள்.

மதுரை – பாலரங்காபுரத்திலிருந்து பேருந்து மூலம் உழவர் சந்தைக்கு வந்திருந்த வயதான தம்பதிகள் திரு.என். சீனிவாசன் – திருமதி. ராஜாம்பாள்



ஆகியோரைச் சந்தையில் வைத்து சந்தித்தபொழுது, அவர்கள் கூறியதாவது, "உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது பற்றி பத்திரிகை, டி.வி.மூலம் தெரிஞ்சிச்சு; இங்க எப்படி இருக்குனு பாத்துட்டு, ஏதாவது வாங்கிட்டுப் போகலாமின்னுதான் வந்தோம். இங்க வந்து பாத்தப்பறந்தான் இவ்வளவு அருமையான மார்க்கெட் வந்திருப்பது தெரிஞ்சது" என்ற திரு.சீனிவாசனை இடைமறித்து அவரது மனைவி திருமதி. ராஜாம்பாள் கூறியது, "சென்ட்ரல் மார்க்கெட்ல நுழையறதே கஷ்டம், அப்புறம் அவங்ககிட்ட பேரம்பேசி நல்ல காயா எடுக்கக் கூட முடியாது; தராசு முள் ஏறுதா? எறங்கறதான்னு கூடத் தெரியாது. அவுங்க வச்சதுதான் சட்டம். அவ்வளவு அடாவடி, ஆனா 'உழவர் சந்தையிலே' பேரம் பேச வேணாம், ஒவ்வொரு காய்க்கும் வெலை எழுதி வைச்சிருக்காக; பொறுமையாக் காய்களைப் பொறுக்கி எடுக்க முடியுது. பொம்பளைன்ற மொறையிலே முக்கியமாத் தோணறது என்னன்னா? சல்லிசான விலையில் பச்சைப் பசேல்னு காய்களைப் புத்தம் புதிசா வாங்க முடியுது" என்றார்.





ஒரு வயதான அம்மையார் கையில் இரண்டு, மூன்று பைகளில் காய்கறிகளுடன் வந்ததைப் பார்த்தபொழுது, இது வீட்டுக்கு வாங்கியது போல் தோன்றவில்லையே என்ற ஐயப்பாட்டோடு அணுகியதில், மானகிரியைச் சேர்ந்த திருமதி. குமராயி கூறியது, "என்ன சார், இரண்டு மூன்று பைகளில் காய்கறியோடு வர்ற என்னை பாத்தா வியாபாரி போலத் தோணுதா? ஆமா நா வியாபாரந்தான் பண்றேன். இட்டிலி சுட்டு வியாபாரம் பண்றேன். எங்க வீட்டுக்காரரு ஒரு பள்ளிக் கூடத்திலே பியூன் வேலை பாத்துட்டு, ஓய்வாயிட்டாரு. குடும்பத்துக்கு வருமானம் பத்தல; சிறிசா இட்டிலிக் கடை வெச்சு வியாபாரம் பண்றோம். கடைக்கும் வீட்டுக்குமாச்சேத்து காய்கறி வாங்கிட்டுப் போறேன். இதுக்கு முந்தி மார்க்கெட்டுக்கு பஸ்ல போயி தெனமும் 30 ரூபாய்க்குக் காய்கறி வாங்குவேன். இப்ப இந்த உழவர் சந்தைக்கு வாறேன்; ஆனா 2 நாளைக்கு ஒருநாள் தான் காய்கறி வாங்கறேன், அதுவும் அதே 30 ரூபாய்க்குத்தான், ஆனா 2 நாளைக்கு வருது" என்று மலர்ச்சியோடு கூறினார்.

### உழவர் சந்தையை ஏதோ ஊர்பேருன்னு நினைச்சேன்

நாராயணபுரத்தைச் சேர்ந்த ஜெயசீலி என்ற அம்மையார் கூறும்பொழுது, "ஏதோ 'ஓழவர் சந்தை', 'ஓழவர் சந்தை'ன்னு எல்லாரும் பேசிக்கிட்டாக; அங்ஙன காய்கறிகல்லாம் வெல கொறைச்சுக் கிடைக்குதுன்னாக, நான் பஸ்ல ஏறி, பஸ் கண்டக்டருக்கிட்ட 'ஓழவர் சந்தை' ஊரு எங்ஙன இருக்குதுனு கேட்டேன். அவரு சிரிச்சிக்கிட்டு, அது ஊருல்லமா அது புதுசா கலைஞரு

தொறந்துவச்ச காய்கறி மார்க்கெட்டுனு சொல்லி, எந்த வழியாப் போகனுங்கிறதயும் சொன்னாரு. மொதல்ல நொழையறப்போ, வெலவாசி எப்படியிருக்குமோனு நெனைச்சுக்கிட்டு, கொஞ்சமாத்தான் வாங்கனும்னு நெனச்சேன். அப்புறம் பச்சைப் பசேல்னு இருக்கிற காய்கறியையும், வெல வெவரத்தையும் கேட்டப்புறம், இந்தா இந்தப் பைநிறைய 4 நாளைக்கு ஆகுறப்புல வாங்கிட்டேன். மத்த எடங்களுலே வாங்குனா, எடையும் 1–க்கு 3/4 தான் இருக்கும். காயும் பழசும் பச்சையுமாத்தான் இருக்கும். இது மாதிரி புதுக்காயா இருக்காது. இனிமே இங்கதான் காய்கறி வாங்க வருவேன்'' என்று மலர்ச்சியோடு கூறினார்.



இதற்கிடையில், உழவர் சந்தையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களைச் சந்தித்து அவரது அபிப்பிராயத்தைக் கேட்டபொழுது,

“இந்த உழவர் சந்தையை இரண்டாவது முறையாக நான் பார்க்க வந்துள்ளேன். வேளாண்மை விற்பனை உயர்நிலைக்குழு உறுப்பினர் என்ற முறையில் எனது கருத்து என்னவென்றால், இதுவரையில் இதுபோன்ற சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைத் தலைச்சுமையாகக் கொண்டு வந்து பல இடங்களில், சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்புச் செய்து பல்வேறு இடையூறுகளுக்கிடையில் விற்க வேண்டிய சூழ்நிலை இருந்து வந்தது. ஆனால், உழவர் சந்தைக்கு வரும் வியாபாரிகள் பஸ்ல லக்கேஜ் கட்டணமில்லாமல் மொத்தமாக இங்கு வந்து உரிமையோடு, இலவசமாகக் கடை நடத்துகின்ற அரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. மிக அதிகமாக வரும் பொதுமக்களுக்கு நியாயமான வகையில் தங்கள் பொருட்களை விவசாயிகள் விற்கிறார்கள்.

விவசாயிகளிடமிருந்து இடையில் வியாபாரிகள் கை மாறாமல் பொதுமக்களுக்கு நேரடியாகக் கிடைப்பதால், நியாயமான விலையில், தரமான பொருட்கள் என்ற நிலை உறுதி செய்யப்படுகிறது.

70% விவசாயிகளைக் கொண்ட நமது நாட்டில் இந்த அரிய திட்டம் விவசாயிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு, மதுரையில் **முதல்வர் கலைஞர்** அவர்களால் துவங்கப்பட்ட இத்திட்டம், இதே வேகத்தோடு மாநிலமெங்கும் பரவவேண்டும் என்ற என் அவாவைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று சட்டமன்ற உறுப்பினர் திரு.சொக்கர் கூறினார்.



உழவர் சந்தைக்கு வந்திருந்த லயன். டாக்டர் துரை அவர்கள் கூறும்பொழுது, “நுகர்வோர் என்ற அடிப்படையில்



சரக்கைக் கொண்டுவந்தமா – கல்லாக் கட்டினாமான்னு, முழுத் திருப்தியோட வீடு திரும்பறேன்னு" அவர் அகமும் முகமும் மலரக் கூறினார்.


**லாரி வைத்தால் பாதி வாடகையை நாங்கள் தரத்தயார்**

மலைத்தோட்ட விளைபொருட்களான முட்டைக்கோஸ், முள்ளங்கி வியாபாரம் செய்து கொண்டிருந்த கொடைக்கானல் மலைப் பகுதியைச் சேர்ந்த மன்னவனூரிலிருந்து வந்திருந்த திரு. கோபால கிருஷ்ணன், திரு. முத்துக்குமார் ஆகிய விவசாயிகள் கூறும்பொழுது, "முன்னாலெல்லாம் கமிஷன் மண்டிக்குக் காய் அனுப்பிக்கிட்டிருந்தோம். அப்பவெல்லாம் கமிஷன் உள்பட எல்லா பிடித்தமும் போக ஒரு நாளைக்கு ரூ.350 தான் கிடைக்கும். இப்ப ரூ.600 வரையில் கிடைக்குது. எங்க ஊருக்குப் பக்கத்திலே 6 கிராமங்களிலேயிருந்து விளைபொருள் வர வாய்ப்பிருக்கு. ஆனா இப்ப மார்க்கெட் கமிட்டியில இருந்து ஒரு வண்டி (வேன்) அனுப்புறாங்க. ஒரு லாரி விட்டா 6 ஊரு விவசாயிகளும் சரக்கு அனுப்புவாங்க. எங்களுக்குக் கெடைச்ச மாதிரி அவுங்களுக்கும் இலாபம் கிடைக்கும்" என்றார்கள். இடைமறித்துக் கேட்டபோது, "ஒரு நாளைக்கு விலை வித்தியாசம் மட்டும் ரூ.250–லிருந்து ரூ.350 இருக்கும்போது, வண்டி நீங்களே எடுத்துக் கொண்டு வரலாமே?" என்றதற்கு "நாங்க பாதி வாடகையைக்

பொதுமக்களுக்கு புத்தம் புதிய காய்கறிகள், அதுவும் சென்ட்ரல் மார்க்கெட் விலையை விட அநேகமாகப் பாதிவிலையில் கூடக் கிடைக்கிறது. நவீன தராசுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், நிலுவையில் தில்லுமுல்லு இல்லாம சரியான எடையில் பொருட்கள் கிடைக்கும். இத்திட்டத்தை அறிவித்த முதல்வர் கலைஞரைப் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று கூறினார்.

நீள நீளமாகப் பச்சைப் பசேலென்ற பீன்ஸை வியாபாரம் செய்து கொண்டிருந்த திரு.ஜெயராமன் என்ற விவசாயியை, சுறுசுறுப்பான வியாபாரத்துக் கிடையிலேயே அவர் பதிலளிக்கும்போது,

"நான் வருசநாட்டு மலைப்பகுதியிலுள்ள முறுக்கோடை என்ற எடத்துலே 2 ஏக்கர் பீன்ஸ் விவசாயம் பண்ணியிருக்கேன். தெனமும், சராசரியா 200 கிலோ கொண்டாறேன். இந்த உழவர் சந்தை ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே சென்ட்ரல் மார்க்கெட்டுக்கு அனுப்புவேன். அங்கே கிலோவுக்கு ரூ.12 –க்கு மேல கெடச்சதில்லே. அதுலயும் ஏத்துக்கூலி, இறக்குக்கூலி, மகமை, ரூபாய்க்குப் பத்துப்பைசா கமிஷன் கொடுக்கணும். ஆனா இங்க சராசரியா ரூ.15–க்கு பீன்ஸ் விக்குது. அங்கிக்கும், இங்கிக்கும் ஒரு நாளைக்குச் சராசரியா ரூ.600 அதிகம் கிடைக்கிறது. அதுலயும்



கொடுக்குறோம்; மார்க்கெட் கமிட்டி பாதி வாடகையைக் கொடுத்தா, தெனம் ஒரு லாரி சரக்கு கொண்டு வரவாய்ப்பிருக்கு" என்று நம்பிக்கையோடு கூறினார்கள்.

**வீட்டுச் செலவுக்கு எடுத்துக்கிட்டு மீதியை ஆண்களுக்குக் கொடுக்கிறோம்**


தெம்பளஞ்சியைச் சேர்ந்த திருமதி. ராக்குப்பிள்ளை என்ற கிராமத்துப் பெண், தன் வயலில் விளைந்த கத்திரிக்காய், வெண்டைக்காய், பச்சை மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் சுறுசுறுப்பான வியாபாரத்திற்கிடையே கூறியது,

"எங்க நெலத்துல இந்தக் காயெல்லாம் போட்டு கஷ்டப்பட்டு, பாடுபட்டு வியாபாரத்துக்குக் கொண்டாந்திருக்கோம். முந்தி இதையெல்லாம் சாக்குல போட்டு கமிஷன் மண்டிக்கு அனுப்புவோம். வாரத்தில ஒருநாள் இல்லைன்னா ரெண்டு நாளு, ஆம்பளைங்க போயி கணக்குச் சீட்டை வாங்கிக்கிட்டு ரூவா வாங்கிட்டு வருவாக. என்ன வெலைக்குப் போச்சு? கமிஷன் கழிப்பு எவ்வளவுன்னு எங்களுக்கு தெரியாது. பணத்தை ஆம்பிளைங்க வச்சிக்கிட்டு, வீட்டுச் செலவுக்கு அப்பப்பத் தருவாங்க. இப்ப அப்படியில்லே, ஒழவர் சந்தையில வித்த காசு கைநெறையக் கெடைக்குது. வீட்டுக்கு வேண்டியத டவுனில வாங்கிட்டு, மீதி ரூவாயை ஒரு கணக்கோட ஆம்பளைட்ட கொண்டு போறேன்" என்று அந்தக் கிராமத்துப் பெண்மணி கிராமத்து மண்வாசனையோடு பேசிய பேச்சில் ஒரு புதிய தன்னம்பிக்கை தெரிந்தது.

மதுரை – உழவர் சந்தையின் பொறுப்பு அலுவலராக, அதாவது விவசாய விளைபொருள் சங்கச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறும்பொழுது,

"மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உழவர் மையத்தைத் தொடங்கி வைத்த 14–11–99 அன்று 4,473 கிலோ அளவுக்கு காய்கறிகளை 110 விவசாயிகள் கொண்டு வந்தாங்க; கிட்டத்தட்ட 1,020 பொதுமக்கள் வந்தாங்க. படிப்படியாக இது உயர்ந்து 30–11–99 அன்று நிலவரப்படி சுமார் 20,180 கிலோ காய்கறி வந்துச்சு. பொதுமக்கள் சுமார் 4,187 பேர் 'உழவர் சந்தை'க்கு வந்து சென்றுள்ளனர்.

விவசாயிகள் தவிர்த்து வேறொருவரும் வியாபாரத் திற்குள் நுழைந்து விடாமல் கண்காணித்து வருகிறோம். மாவட்ட ஆட்சியர் அவர்கள் தினமும் 2,3 முறை வந்து பார்த்து ஆலோசனைகளை வழங்குகிறார். மழை வந்து தண்ணீர் தேங்கிடுச்சு; உடனடியாகத் தாழ்வான பகுதிகளில் லாரி, லாரியாக மண் கொண்டு வந்து சரிப்படுத்தி, சிமெண்ட் பலகைகளைப் போடுவதற்கும்



கலெக்டர் அவர்கள் மிகுந்த ஈடுபாட்டோடு, உரிய உதவிகளை வழங்கினார்" என்று குறிப்பிட்டார்.

உழவர் சந்தையின் செயல்பாடுகளைப் பார்த்த பின்னர், எங்கிருந்து காய்கறிகள் உற்பத்தியாகி வருகிறதோ? அந்தக் கிராமப்புரத்துத் தோட்டங்களையும், விவசாயிகளையும் நேரடியாகக் கண்டு கலந்துரையாடும் நோக்கத்துடன், மதுரையிலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊரகக் கிராமமான 'சருகுவலையபட்டி' சென்ற பொழுது, மேலூர் வட்ட உதவி இயக்குநர் திரு. பெரியசாமி, வேளாண்மை அலுவலர் திரு.ராபர்ட் ஜேம்ஸ் பொன்னையா, உதவி வேளாண்மை அலுவலர் திரு. பிச்சை மணி ஆகியோரை காண முடிந்தது. அக்கிராமத்திலுள்ள செங்கரும்பு விவசாயிகள், இன்னும் ஓரிரு மாதங்களில் வெட்டி விற்று விடுவார்கள் என்றும் அதன் பிறகு அந்நிலங்களில் உழவு அடித்து, கிணற்று நீரை வைத்து என்னென்ன காய்கறிகள் விளைவிக்கலாம் என்று கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள்.

உதவி வோண்மை இயக்குநர் திரு. பெரியசாமி அவர்கள் கூறுகையில், "மேலூர் வட்டாரத்தைப் பொறுத்தவரையில், மதுரை உழவர் சந்தைக்கு புலிப்பட்டி,

தனியாமங்கலம் மற்றும் சருகுவலைய பட்டியிலிருந்து விவசாயிகள் காய்கறி வகைகளை மதுரை – உழவர் சந்தைக்கு விற்பனைக்குக் கொண்டு செல்கிறார்கள். சருகுவலையபட்டி கிராமத்தைப் பொறுத்த வரையில், திரு. ஆ. கண்ணன், திரு.பெ. லெட்சுமணன், திரு. ஆ. ஆண்டியப்பன், திரு. சிதம்பரம், திரு. சேகர் ஆகியோருக்கு 'அடையாள அட்டை'கள் வழங்கப் பட்டுள்ளதாகவும், திரு. வெள்ளைக்கண்ணு, திரு. தம்பித்துரை, திரு. கண்ணன், திரு. தனுஷ்கோடி, திரு.இராமசாமி ஆகியோருக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ள தாகவும் தெரிவித்தார். மேலும், மேலூர் வட்டாரத்தில் வெள்ளலூர், கட்டசோலைப்பட்டி, உரங்கான்பட்டி, அம்பலகாரன்பட்டி, கோட்டநத்தம்பட்டி ஆகிய கிராம விவசாயிகள் தங்களுக்கும் அடையாள அட்டைகள், உழவர் சந்தையில் இடம், உழவர் சந்தை சிறப்புப் பேருந்து வசதிகளும் வேண்டுமெனக் கோரி வருவதாகவும் கூறினார்.



**இனிமேல் எங்களை 'கலைஞரின் உழவர் சந்தை விவசாயிகள்' என்றுதான் அழைக்கவேண்டும்**

சருகுவலையபட்டி விவசாயிகள் திரு. லெட்சுமணன், திரு. ஆண்டியப்பன் ஆகியோர் (இவர்கள் தங்களை 'கலைஞரின் உழவர் சந்தை விவசாயிகள்' என்றுதான் அழைக்க வேண்டுமென்று பெருமையோடு கூறுகிறார்கள்) "உழவர் சந்தைத்" திட்டத்தை கலைஞர் மதுரையில் தொடங்கிவைத்ததைக் கேள்விப்பட்டோம். அங்கெல்லாம் நம்மள மாதிரி தொலைதூரக் கிராமத்துக்கு வாய்ப்புக் கெடைக்குமானு, ரொம்ப தயக்கமாத்தான் அதிகாரிகளைப் போய் பார்த்தோம். ஆனா உடனடியா எங்களுக்கு பாஸ் குடுத்தாங்க. அப்புறம் எங்க ஊரிலிருந்து போற பஸ் காலை 6 மணிக்குப் போறதை, காலை 4 மணிக்கு மாத்தித்தாங்கன்னு கலெக்டர் கிட்ட கேட்டம். அவரும் உடனடியா அதுக்கு ஏற்பாடு பண்ணாரு. தற்சமயம் மதுரை உழவர் சந்தைக்கு – கருணைக்கிழங்கு, கத்திரி, வாழைக்காய், வாழை இலை, எலுமிச்சை, வெண்டைக்காய் எல்லாம் சேத்து, ஒரு நாளைக்கு 600–லிருந்து 800 கிலோ வரை கொண்டு போறோம். இதுல முக்கியமாச் சொல்ல வேண்டியது என்னன்னா? தோட்டத்தில வெளையிற காய்கறியை பொதியாக் கொண்டு போய், அதுலயும் கிழக்கு ஊர்கள்லே (திருப்பத்தூர், காரைக்குடி) சந்தைகள்லே கொண்டு போய் கெடச்ச வெலைக்கு வித்துட்டு வருவோம். மேற்கே அதுலயும் மதுரை டவுனுக்கு இந்த 'உழவர் சந்தை' வந்தப்புறந்தான் காய்கறி கொண்டு போக முடியுது. எங்க





பொதுவாக இந்த சருகுவலையபட்டி விவசாயிகள், அதிலும் குறிப்பாக உழவர் சந்தைக்குச் சென்றுவரும் விவசாயிகள் கூறியது என்பதை விடக் கோரியது யாதெனில், "எங்க ஊரு செங்கரும்பு ரொம்ப பிரசித்திப் பெற்றது; இதத் தோட்டத்திலேயே 3 ரூபாய்க்கு (அதாவது 300 கரும்புகள் கொண்ட ஒரு வண்டி கரும்பு – 900 ரூபாய்) வியாபாரிகள் விலைக்குக் கேட்கிறார்கள். இதை வாங்கி மதுரையில் ஒரு கரும்பு 10 ரூபாய் அளவில் பொதுமக்களுக்கு விற்கிறார்கள். உழவர் சந்தையில் ஒரு கரும்பு ரூ.4–லிருந்து ரூ.5 வரை விற்க கலெக்டர் அனுமதிக்க வேண்டுமென்றும், தரமான விதைகள், பூச்சி மருந்து, உரம் போன்றவைகளைத் தோட்டக் கலைத்துறை மூலம் உழவர் சந்தையிலேயே விற்றால் நாங்க அங்கேயே வாங்க வசதியாக இருக்கும்" என்றும் கோரினார்கள்.

தலைமொறைகள்ல இல்லாத தைரியம் இப்ப எங்களுக்கு வந்திருக்கு" என்று இவர்கள் கூறிக்கொண்டிருக்கும் போதே 20,25 விவசாயிகள் கூட்டமாக வந்து "எங்களுக்கும் அடையாள அட்டை கொடுங்கள்" என்று கோரஷாகக் கேட்டார்கள். ''அடுத்த வாரம் கருணைக்கெழங்கு வெட்டணும், எனக்கும் பாஸ் கொடுத்தாதானே நானும் உழவர் சந்தை சிறப்பு பஸ்லே எந்தோட்டத்து கெழங்கை கொண்டு போகலாம்" என்று அவர் கேட்டபோது, பிறருடைய அடையாள அட்டையைப் பயன்படுத்திடக் கூடாது என்ற விழிப்புணர்வு அந்தக் குக்கிராமம் வரை எட்டியிருப்பது வியப்புக்குரியதாக இருந்தது. இவர்களில் முன்னால் சருகுவலையபட்டி ஊராட்சித் தலைவரும், நீண்ட காலமாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டு வருபவருமான திரு. வெள்ளையப்பா அவர்கள் கூறுகையில், "கடுமையாக உழைக்கக்கூடிய, சூதுவாது தெரியாத இக்குக்கிராமத்துச் சக விவசாயிகள், இதுவரையில் இருக்கிற எடத்தையும், கெடைக்கிற தண்ணியையும் வச்சுக்கிட்டு கடும் பாடுபட்டு எதையாவது போட்டு விளைய வைத்து, வந்த வெலைக்கு வித்துக் கெடைச்ச காசு வச்சுக்குவோம் என்ற நிலை **கலைஞரின்** இந்த வரப்பிரசாதமான அற்புதத் திட்டத்தினால், ஒரு பெரிய மாற்றத்தையே உருவாக்கப் போகிறது" என்று ஒரு புதிய கணிப்பினைத் தந்தார்.

## மதுரையில் இரண்டாவது உழவர் சந்தை விரைவில் தொடங்க முயற்சி


மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.தங்கவேலு அவர்கள் கூறும்பொழுது "மிகக் குறுகிய காலத்தில், முதல் உழவர் சந்தையை உருவாக்கினோம். தினம் குறைந்தது ஒரு தடவையாவது உழவர் சந்தையை நான் சென்று பார்த்து வருகிறேன். விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்போடும்



ஆர்வத்தோடும் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வருகிறார்கள். பொதுமக்கள் மத்தியில் அதாவது, நுகர்வோர் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அதிலும் குறிப்பாக சனி, ஞாயிறுகளில் இரு சக்கர வாகனங்களிலும், கார்களிலும் குடும்பம் குடும்பமாக வந்து காய்கறிகளை வாங்கிச் செல்கிறார்கள். மதுரையில் மேலும் ஒரு உழவர் சந்தை விரைவில் உருவாகிட முயற்சிக்கப்படும்" என்று தெரிவித்தார்.



சருகுவலையபட்டி விவசாயிகள் கோரியுள்ளபடி செங்கரும்பு விலையை, கட்டுபடியான நல்ல விலையில் விற்க அனுமதிக்கப்படும் என்றார். மேலும் இடுபொருட்களை உழவர் சந்தையிலேயே விற்க தோட்டக்கலைத்துறையின் மூலம் விற்க ஏற்பாடு செய்யப்படுமென்றும், உழவர் சந்தையை ஒட்டி சுமார் ஒரு ஏக்கரில் தோட்டக்கலை மாதிரிப் பண்ணையையே உருவாக்கிட முயற்சிக்கப்படும் என்றும், உழவர் சந்தை விவசாயிகளுக்குக் கடனுதவி வழங்கிட ஏதுவாக கூட்டுறவு வங்கி ஒன்றின் கிளையைத் திறக்கவும் முயற்சிக்கிறோம் என்றும் மாவட்ட ஆட்சியர் திரு. தங்கவேலு தெரிவித்தார்.



மொத்தத்தில் முதல்வர் கலைஞரின் இந்த 'உழவர் சந்தைத்திட்டம்' கிராமப்புறச் சராசரி விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய மாற்றத்தை நிச்சயமாக உருவாக்கும் என்பதிலும், அதேபோன்று நுகர்வோர்களான பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெறுகிறது என்பதிலும் எள்ளளவும் ஐயமில்லை.

*பேட்டி*
**இரா. பரதன், எம்.ஏ.,**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906


ராமலிங்கம்
த/பெ.சந்திரன்
மதுரை
EXNORA

தமிழரசு
பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23

